Registered as a News Paper in Sri Lanka.

07-10

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

தினக்கதிர்

ஒளி - 01 - கதிர் - 177 07-10-2000 சனிக்கிழமை பக்கங்கள் - 12 விலை - ரூபா 5/-


சமய -பிரதேச வேறுபாடுகளில்லா மனிதம் நிறைந்த சேவகனாக...
மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரஜைகள் முன்னணி வேட்பாளர்
பூ.வி.எம்.ஐ.றஹ்மத்துல்லாஹ்

X
எனது இலக்கம் 7
குடும்பத்திற்கு ஒருவர் எனக்கு வாக்களியுங்கள்!
அசாத்தியம் என்பதை சாத்தியமாக்குவோம் !



பக் 2

பால்ராஜ் தலைமை தனித்துவமானது



சினிமா பக் 6

சரித்திரம் பெற்றடச்சுக்கோட்டை



பக் 5

# நாகர் கோவில் பகுதியில் புலிகள் – படையினர் தொடர்ந்து சண்டை!

(வவுனியா நிருபர்)

ஓயாத அலைகள் நான்கு படையணிகள் நாகர்கோவில் படைத்தளங்கள் மீது முன்னேற்றகரமான தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கின்றன என புலிகளின் வானொலி அறிவித்துள்ளது. வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் படையினரின் 52ஆவது பிரிகேட் தளத்தின் அதிகூடிய பலங்களையும், பாதுகாப்பையும் கொண்ட பிரதான முன் அரண்மீது வியாழன் பிற்பகல் ஒரு மணியளவில் ஓயாத அலைகள் நான்கு படையணிகள் உக்கிர தாக்குதலை ஆரம்பித்தனர்.

படையினரின் மிக 27. கிபிர், எம்.ஐ.24,ஆட்டிலெறி, மோட்டார் தாக்குதலிற்கு மத்தியில் ஓயாத அலைகள் நான்கு படையணிகள் ஆட்டிலெறி, மோட்டார், மூலம் நேரடியாக படையினர் மீது உக்கிர தாக்குதலை நடத்துகின்றன.

ஓயாத அலைகள் நான்கின் உக்கிரதாக்குதல்களால் படையினரின் அரண் பகுதிகள் தகர்க்கப்படுகின்றன. படைத்தரப்பும் பெரும் அழிவுகளை சந்தித்து வருகின்றது. தொடர்ந்தும் தாக்குதல் முன்னேற்றகரமாக நடக்கின்றது எனவும் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஓயாதஅலைகள் நான்கு தென்மராட்சி, கிளாலி, எழுதுமட்டுவாள் படையினரின் முன் அரண்களைத் தாக்கியழித்து. அந்தப் பகுதி படையினர் மீது

(12ம் பக்கம் பார்க்க)

## முச்சக்கர வண்டி ஓட்டி வந்த பொலிஸார் பலி!

(ஏறாவூர்,ஓட்டமாவடி நிருபர்கள்)

ஏறாவூர் குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று வெள்ளிக் கிழமை மாலை 5.30மணியளவில் விடுதலைப்புலிகள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

முப்பத்திரெண்டு வயதான அபூசாலி அப்துல்றசாக் என்பவரே பலியானர். குடும்பஸ்தவரான இவருக்கு இரு குழந்தைகள் உண்டு. இவர் கடமை நேரத்தின் பின்பு முச்சக்கர வண்டி ஓட்டுவது வழக்கம் சம்பவநேரம் ஏறாவூரில் இருந்து கூலிக்கு பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்லும் போதே ஆயுதபாணிகள் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாக தெரியவருகிறது.

## ஈ.பி.டி.பி வேட்பாளர் பயணம் செய்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு !

(களுவாஞ்சிகுடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பெரியதம்பி வீரசிங்கம் (செந்தில்) பயணம் செய்த வாகனம் மீது நேற்றுப்பகல் களுவாஞ்சிகுடி மகிளூரில் வைத்து இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரும் கட்சி ஆதரவாளர்கள் இருவரும் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி உறுப்பினரான ஜெயசேகர் (சுதா), கட்சி ஆதரவாளர்களான சேற்றுக் குடாவைச் சேர்ந்த கபிலன், சூளாவடியைச் சேர்ந்த தேவராசா ரமேஸ் ஆகியோரே காயமடைந்த நபர்களாவர். இச்சம்பவத்தில் வேட்பாளரான பெரிய தம்பி வீரசிங்கம் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

சம்பவத்தைத் தொடர்ந்து வேட்பாளர் உட்பட மூவர்காணாமல் போயுள்ளதாக செய்திகள் வெளியான போதும் மேற்படி உறுப்பினர்கள் அலுவலகம் வந்து சேர்ந்துள்ளதாக மட்டக்களப்பு ஈ.பி.டி.பி பேச்சாளர் விஜி தங்கராசா தெரிவித்தார்.-

## ஆளும் கட்சிக்கோ யு.என்.பிக்கோ அம்பாறைத் தமிழர்கள் ஆதரவு இல்லை

(அரியம்)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர் வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றை நிராகரித்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நலன்களைப் பேணக்கூடியவாறு சுயமாக சிந்தித்து தமது வாக்குரிமைகளை பயன்படுத்த வேண்டும் என்று தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான கட்சிகளும் தமிழர் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை காண தவறிவிட்டன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரும் உரிமை அவர்களுக்கு இல்லை என்று தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி இக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் வேலைவாய்ப்பு உட்பட சகல துறைகளிலும்

(12ம் பக்கம் பார்க்க)

## திருமலை ஐ.சி.ஆர்.சி.அலுவலம் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல்!

(நமது நிருபர்)

திருகோணமலை மூதூரில் உள்ள ஐ.சி.ஆர்.சி அலுவலகம் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து திருமலையில் ஐ.சி.ஆர்.சியின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருமலை ஐ.சி.ஆர்.சி மாவட்ட வெளிக்கள அதிகாரி புஸ்பராசா தெரிவித்துள்ளார்.

(12ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி ஒருவர் காயம்

(வவுனியா நிருபர்)

கிளிநொச்சியில் இரத்தின புரம் பகுதியில் காணியைத் துப்பரவு செய்யும் போது மிதிவெடியில் சிக்கி இரண்டு பிள்ளைகளின் தந்தையான 28 வயதுடைய பொன்னையா . ரவி. படுகாயம்டைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்


சுயேச்சை குழு-1 இல்
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில்
இரா. துரைரெட்ணம் (ரெட்ணம்) தலைமையில்
மீன் சின்னத்தில் போட்டி
3
சுயேச்சைக் குழு (1)

X
புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி வசதிகளை எமது மாணவர்களும் பெற மீன் சின்னத்துக்கே வாக்களிப்போம்
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கிறது தினக்கதிர்

## போர் சதுரங்கத்தில் காய் நகர்த்தலுக்கான வாய்ப்பு

# புலிகள் பக்கமே அதிகம்

வன்னியில் 1999 நவம்பர் தொடங்கி வெற்றி பெற்ற புலிகளின் ஓயாத அலைகள் - 3 அவர்களுடைய மரபுவழிப் போர்த்திறன் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து விட்டமையைக் காட்டிற்று. இதன் தாற்பரியத்தை சிறிலங்காப் படைத்துறை சரியாக உணர - படிக்கத் தவறிற்று. அது என்ன இந்த மரபுவழிப் போரின் புதிய வளர்ச்சிக்கட்டம் ?

இதைச் சுருக்கமாகத் தமிழில் படைநகர்த்தற் சண்டைத் திறன் எனலாம். மேற்கத்தியப்போர் வல்லுநர்கள் இதை Manoeuvre War Fighting Capability எனக் கூறுவர். ஒரு பெருநிலப் பரப்பிலுள்ள இரு அரசுகளுக்கிடையிலான நிலப்பறிப்பு - நாடுபிடிப்புப் போர்களில் இந்த படைநகர்த்தற் சண்டைத்திறனே பெரும்பாலும் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கிறது. உலகப் போர் வரலாற்றில் ஒரு மாபெரும் படையெடுப்பெனக் கருதப்படும் ஒப்பரேஷன் பாபரோஸ்ஸா (Operation Barbarossa) படைநகர்த்தற் சண்டைத்திறனுக்கோர் நல்ல உதாரணமாகும். சோவியத் ரஷ்யாவைக் கைப்பற்றும் நோக்குடன் இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரால் திட்டமிடப்பட்டு மேற்கு ரஷ்யாவின் பல்லாயிரம் சதுரமைல் பரப்பை உள்ளடக்கும் வகையில் பல்வேறு பெரும் படையணிகளை ஒருங்கிணைத்து. அவற்றுக்கான

**வழமையாக மரபுவழிப் போர்களில் இவ்வகையான பின்புற நகர்த்தல்கள் வான்வழி வழங்கலை நம்பியே செய்யப்படும். எதிரியின் பின்புறம் தரையிறக்கப்படும் அணிகளுக்கு வேண்டிய உணவு மற்றும் தோட்டாக்கள் வான்வழியாகத் தொடர்ச்சியாக அனுப்பமுடியுமெனில் மட்டுமே மேற்கண்ட வகை படை நகர்த்தலில் மரபுவழி இராணுவத் தலைமைகள் ஈடுபடும்.**

வழங்கல் சீர்குலையாதபடி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே பாபரோஸ்ஸா ஆகும். (ஹிட்லரின் வீழ்ச்சிக்கும் இதுவே வித்திட்டது என்பது வேறு கதை) ஒரு மரபுவழிப்போரை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அடித்தளமான படைநகர்த்தற் சண்டைத்திறன் பின்வருவனவற்றில் தங்கியுள்ளது.

1. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட முன்செல்லும் அதிரடிப்படை அணிகள்.
2. குறிப்பிட்ட களமுனையின் இயல்புகளுக்கு மிகவும் ஏற்றமுறையில் அமைந்த வழங்கற் பாதைகளும் வசதிகளும்.
3. பரந்த களமுனையில் வெவ்வேறு இடங்களில் நகரும் படையணிகளை நுட்பமாகக் குறிக்கோள் பிசகாத வகையில் ஒருங்கிணைத்து இயக்கும் கட்டளையகமும் அதற்கான நவீன தொலைத்தொடர்பு களும்.
4. சரியான சூட்டாதரவு (fire support)
5. படைநகர்த்தல்கள் நடைபெறும் நிலப்பரப்பின் சகல புவியியற் தன்மைகள், காலநிலைச் சிக்கல்கள், பாதைகள் என்பன பற்றிய மிகத்தெளிவான, நுட்பமான அறிவு.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களிலும் ஹிட்லரின் ஒப்பரேஷன் பாபரோஸ்ஸா சிறப்புற அமைந்தபோதும், மேற்கு ரஷ்யாவின் புவியியல் அமைப்பு, காலநிலைச் சிக்கல்கள், இவை வழங்கற் பாதைகளுக்கு ஏற்படுத்திடக்கூடிய இடைஞ்சல்கள் ஆகியன பற்றி ஜேர்மன் படைத்துறை நுட்பமாகப் புரிந்து கொள்ளாததும் அது ஒரு கட்டத்திற்கப்பால் பின்னடைவுகளைச் சந்தித்து இறுதியில் தோல்வியடைந்தமைக்கு ஒரு காரணம்



தளபதி கேணல் பால்ராஜ், புலிகள் அணியினருடன்

எனப் போர் வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

இந்தவகையில் 1999 நவம்பர் 2 தொடங்கிய ஓயாத அலைகள் மூன்று பற்றி நாம் விரிவாக ஆராய்வது நன்றெனினும், இங்கு இடம் போதாமையால் குடாநாட்டினுள் நடைபெற்ற படைநகர்த்தற் சண்டைகளைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்தபின்னர் விடயத்திற்கு வருவோம்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் மூன்றாம் உலக நாடுகளில் நடைபெற்ற தேசிய விடுதலைப் போர்களை நாம் கவனித்து ஒப்பிட்டு நோக்கிவருகையில் ஆனையிறவின் வீழ்ச்சிக்கு வழிகோலிய புலிகளின் படைநகர்த்தற் சண்டைகளின் தொகுப்பினைப்போல வேறு எங்குமே நடைபெறவில்லை எனத் திட்டவட்டமாகக் கூறக்கூடியதாக உள்ளது. உலகின் பல இடங்களிலும் நடைபெற்ற இப்படியான மரபுவழிப்போர்களின் வரலாற்றில் மிகத்தனித்துவமான சிறப்பத்தியாயமாக ஆனையிறவைக் கைப்பற்ற புலிகள் மேற்கொண்ட படை நகர்த்தற் சண்டைகள் அமையும் என்பதில் ஐயமில்லை. இது ஏன் எனச் சற்றுச் சுருக்கமாகப் பார்ப்போம்.

### பின்புறமாகச் சென்று தாக்குவது சிறப்பானதொன்று

படைநகர்த்தற் சண்டைத் தந்திரோ பாயங்களில் சிறப்பான தொன்றாகக் கருதப்படுவது எதிரியின் படைநிலைகளுக்குப் பின்புறமாகச் சென்று தாக்குவதாகும். இதை வழக்கமாக, கிட்டத்தட்ட நூற்றுக்குத் தொண்ணூறு வீதம், வான்வழியாகவே மரபுவழிப் படைகள் செய்யும். Paratroops என்பன நவீன மரபு வழிப் படைகளில் இதற்கெனவே உருவாக்கப்பட்டன. அத்துடன் பொதுவாக பாதுகாப்பான தூரத்திலேயே எதிரிப்படை அணிகளின் முதுகுப்பக்கம் புகுந்து நிலையெடுப்பது வழமை.

ஆனையிறவின் ஒரேயொரு நம்பகமான வழங்கற்பாதையாக இருந்தது வெற்றிலைக்கேணி. இரண்டாவது கண்டிவீதி. ஆபத்திற்கு யாழ் கடல்நீரேரியை அண்டியிருந்த பழம்பாதை. புலிகளின் முதல் நகர்வு வெற்றிலைக்கேணியை அமுக்கிற்று. இரண்டாவது நகர்வே உலகப் போரியல் வரலாற்றில் முக்கியமானது - தனித்துவமானது. வெற்றிலைக்கேணி கட்டடைக் காட்டுப் பகுதியிலிருந்து கடல் வழியாக ஒரு கடற்படை அரணை உடைத்துக்கொண்டு, மாமுனையில் தரையிறங்கி, அங்கிருந்த சிறிலங்காப் படைத்தளத்தை அழித்து, பின்னர் மேற்காகக் கண்டற்காட்டுப் பகுதியை ஊடறுத்து, இத்தாவில் - முகமாலைப் பகுதியில் கண்டிவீதியைக் கைப்பற்றி இயற்கை அரண்களற்ற அந்தப் பகுதியில் 53 டிவிசனின் அமெரிக்கப் பயிற்சிபெற்ற சிறப்புப் படைகளின் தாக்குதல்களையும், வகைதொகையற்ற செறிந்த பீரங்கி வீச்சுக்களையும் சமாளித்துக் கொண்டு, வழங்கல் வழிகள் ஏதுமற்ற நிலையில் பெரும்பலம் பொருந்திய தாழையடிச் சிறிலங்காப் படைத்தளம் வீழும் வரை A9 சாலையில் நின்றுபிடித்த பால்ராஜும் அவரது படைத்துணைவர்களும் ஈட்டிய வெற்றி உலகப் படைநகர்த்தற் சண்டைகளில் தனித்துவமானது என மேற்கு நாடொன்றின் மூத்த படையதிகாரி ஒருவர் அண்மையில் என்னுடன் பேசுகையில் ஒப்புக் கொண்டார்.

### பால்ராஜ் தலைமை தனித்துவமானது

வழமையாக மரபுவழிப் போர்களில் இவ்வகையான பின்புற நகர்த்தல்கள் வான்வழி வழங்கலை நம்பியே செய்யப்படும். எதிரியின் பின்புறம் தரையிறக்கப்படும் அணிகளுக்கு வேண்டிய உணவு மற்றும் தோட்டாக்கள் வான்வழியாகத் தொடர்ச்சியாக அனுப்பமுடியுமெனில் மட்டுமே மேற்கண்ட வகைப்படை நகர்த்தலில் மரபுவழி இராணுவத் தலைமைகள் ஈடுபடும். ஏனவேதான் பால்ராஜின் தலைமையில் நடைபெற்ற நகர்வு தனித்துவமானது என்கிறேன்.

இப்படியாக இந்த நகர்த்தல் ஆனையிறவின் இரண்டாவது வழங்கற் பாதையான கண்டிவீதியை (A9) வெட்டியது. மூன்றாவது படைநகர்த்தல் பரந்தனில் இருந்த சிறிலங்காப்படைகளின் பெரு

**டிசிவராம்**

நன்நீர்க்கிணறுகளை அழித்தன. மூன்றாவது நகர்வு கிளாலி - புலோப்பளை - பளை ஊடாக திறக்கப்பட்ட வழங்கற்பாதையை புதுக்காட்டுச் சந்திப்பகுதியில் துண்டாடிற்று. நான்காவதும் இறுதியுமான நகர்வு சிறிலங்காப் படையினரிடம் கடைசியாக எஞ்சியிருந்த நன்நீர்க்கிணறுகளை இயக்கச்சியில் அழித்தது. ஆனையிறவு வீழ்ந்தது. நான் மேற்கூறிய படைநகர்த்தல்களுக்கு இன்றியமையாத பல உப படைநகர்வுகளையும் புலிகள் ஆனையிறவு போரின் போது மேற்கொண்டனர். அவற்றினை இங்கு விரிவஞ்சி விடுகின்றேன்.

புடைநகர்த்தற் சண்டை எனில் யாது என்பது பற்றி சற்று நீண்டுவிட்ட இப்பீடிகையுடன் இனித்தற்போது தென்மராட்சிப் பகுதியில் தொடங்கப்பட்டுள்ள ஓயாத அலைகள் நான்கு எப்படி உள்ளது எனப் பார்ப்போம்.



செறிந்த மரபுவழிப் போர்களில் ஈடுபடும் படைத்தளங்களுக்கு வழங்கல் இன்றியமையாதது. இது ஏன் என்பது உலோகத்தாலான ஒரு சிறு 7.2 m.m. தோட்டாப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு சற்றுத் தூரம் நடந்துபார்த்தால் உங்களுக்குப் புரியும். இதைவிட எடைகூடிய ஆயிரக்கணக்கான பெட்டிகளையும் ஏனைய பெருட்களையும் எரிபொருளையும் தங்குதடையின்றி ஒரு களமுனைக்கு அனுப்பவும் காயம்பட்டோரை வெளியெடுக்கவும் வழங்கற்பாதைகள் அவசியம். அதிலும் களமுனைக்கும் பின்தளப்பகுதிக்கும் இடையில் ஆகக்குறைந்த தூரத்திலான செறிவான படை ஊர்திப் போக்குவரத்திற்கு ஏற்ற வழங்கற் பாதைகளே முக்கியம்.

### தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் பாதை

ஆனையிறவும் பளையும் புலிகளிடம் வீழ்ந்தபின்னர் தென்மராட்சியில் சிறிலங்காப் படையினரின் தற்காப்புத் திட்டம் இரு தட்டுக்களாக அமைக்கப் பட்டிருந்தது.

முதல் தட்டு - 1. எழுதுமட்டுவாள் படைத்தளம், 2. மூன்று கிலோ மீட்டர் நீளமான அதன் முன்னரங்கப்பாதுகாப்பு வலையம், 3. கொடிகாமத்திலிருந்து எழுதுமட்வாளுக்கான வழங்கற்பாதை 4. எழுதுமட்டுவாள் - மிருசுவிலிலிருந்து கிளாலிக்கான உப வழங்கற்பாதை, 5. எழுதுமட்டுவாளிலிருந்து கிழக்காக நாகர் கோயிலுக்கான உபவழங்கற் பாதை. கொடிகாமத்திற்கும் எழுதுமட்டுவாளுக்குமிடையில் கண்டி வீதி (A9) தற்செயலாகப் புலிகளால் துண்டிக்கப்பட்டால் வெளியேற அல்லது வழங்கலை (supply) மேற்கொள்ள வசதியாக 52 - 3 பிரிகேட்டின் எழுதுமட்டுவாள் தளமும், கிளாலித்தளமும் கடற்படையின் Special Boat Squadron தளமும் A9க்கு கிழக்காகக் கடல்நீரேரியையும் அதையண்டிய கச்சாய், கொடிகாமப் பாதையையும் இலகுவாக எட்டக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன. தென்மராட்சியில் உள்ள சிறிலங்காப் படையினரின் இரண்டாவது பின்புலப் பாதுகாப்புத் தட்டு கொடிகாமத்தளத்தையும், அதன் உப படைநிலைகளையும். கொடிகாமத்திலிருந்து வறணியூடாக நெல்லியடி செல்லும் பிரதான வழங்கற் பாதையையும் உள்ளடக்கியது.

இங்கு பிரச்சினை என்னவெனில் தென்மராட்சியிலுள்ள சிறிலங்காப் படையினரின் பாதுகாப்பிற்கு உயிர்நாடியான கொடிகாமம் - வறணி - நெல்லியடிச்சாலை பலாலியிலிருந்து தூரம் கூடிய, தலையைச் சுற்றி மூக்கைத்தொடும் வகையில் அமைந்த வழங்கற் பாதையாகும் என்பதே.

பலாலிக்கும் - தென்மராட்சிக்கும் இடையில் மிகக் குறுகிய தூரத்தைக் கொண்ட வழங்கற் பாதை புத்தூர் - சரசாலை வீதியாகும். இதைப் புலிகள் ஓயாத அலைகள் மூன்றின் இறுதிக் கட்டத்தில் துண்டித்துவிட்டனர். அடுத்தது யாழ்நகர் - சாவகச்சேரியூடான கண்டிவீதி (A9). இதையும் புலிகள் அப்போது துண்டித்துவிட்டனர்.

தென்மராட்சியில் தன் பிடியைத் தளரவிடாது வைத்திருக்க வேண்டுமாயின் எப்படியாவது புத்தூர் - சரசாலைப் பாதையைக் கைப்பற்ற வேண்டும் எனச் சரியாகவே கணிப்பீடு செய்து ரிவிகிரண நடவடிக்கையைத் தொடங்கிப் படுதோல்வி கண்டது சிறிலங்காப் படைத்தலைமை. ஆனால் இப்பின்னடைவுக் கிடையிலும் புத்தூர் - சரசாலை வீதியில்லாவிட்டால் தென்மராட்சியில் மூளக்கூடிய

11ம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்களுக்குப் பதில் கூறிவிட்டு வாக்கு வேட்டையில் இறங்குங்கள்!

இந்த வாரம் எமது அரசியல் வானில் புதிய நகைச்சுவை நாடகங்கள் அரங்கேற ஆரம்பித்திருக்கின்றன. எல்லாம் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் எழுதிய 'ஏமாற்று அரசியல்' என்ற புத்தகம் சென்ற மாதம் வெளி வந்ததனால் ஆரம்பித்ததுதான். இந்தப் புத்தகத்தில் திரு பாலசிங்கம் அவர்கள் 1994-1995இல் விடுதலைப் புலிகளுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் விவரங்களைக் கொடுத்து அந்த காலகட்டத்தில் இரு தரப்பினர்க்குமிடையே பரிமாறப்பட்ட 40 கடிதங்களையும் வெளியிட்டிருந்தார். தென்னிலங்கையைப் பொறுத்தவரை இந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருந்தவை யெல்லாமே அதிர்ச்சியூட்டும் தகவல்களாகவே இருந்தன. இதுவரை காலமும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணங்கிய விடயங்களையெல்லாம் அரசாங்கம் செயது கொடுத்தும் கூட விடுதலை ப்புலிகள் எதேச்சாதிகாரமும் யுத்த அவாவும் மிகுந்தவர்களாக நடந்து பேச்சுவார்த்தைகளை முறித்தனர் என்றே தென்னி லங்கை நம்பிக் கொண்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி சந்திரிகா வுக்கும் தலைவர் பிரபாகரனு க்கும் இடையே நிகழ்ந்த எழுத்துப் போக்குவரத்து. அரசாங்கம் வாக்குக் கொடுத்தபடி வட-கிழக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை யென்பதையும் அதைக்காரணம் காட்டி திரு பிரபாகரன் அவர்கள் போதுமான 'கால அவகாசமும் எச்சரிக்கையும் கொடுத்து விட்டே பேச்சுவார்த்தைகளை முறித்தார் எனவும் தெளிவாக்குகின்றது.

இந் நூலிலிருந்து தெரிந்தெடுத்த கடிதங்களை முதலில் பிரசுரம் செய்த சண்டே லீடர் பத்திரிகையானது, தகுந்தபடி எச்சரிக்கை கொடுத்த பின்புதான் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையினை முறித்துக்கொண்டனர் ஆயினும் அது நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தபபடாதது ஏன் என்ற கேள்வியினை எழுப்பியது. வாசகர்களுக்கு நினைவிருக்கும், விடுதலைப்புலிகள் ஒருபோதும் பேச்சுவார்த்தைகளுக்கு வரமாட்டார்கள். ஆகவேதான் சமாதானத்துக்காக யுத்தம் நாம் புரிய வேண்டியிருக்கின்றது என்று அன்று அரசாங்கம் தன்னை நியாயப்படுத்திக் கொண்டது. ஆனால் தகுந்த காரணங்கள் காட்டித்தான் புலிகள் போரினை மீள ஆரம்பித்தனர் எனில் இந்த வாதம் செல்லுபடியாகாதல்லவா?

இந்த அம்பலத்தை ஐக்கிய தேசியக் கட்சி சும்மா விட்டு வைக்குமா? அதன் தலைவர் திரு ரணில் விக்கிரம சிங்க சந்திரிகாவிற்கு உடனே கடிதம் வரைந்தார்.' உங்களுக்கு பேச்சுவார்த்தைகள் முறிய இரு வாரங்களுக்கு முன்னரே அவ்வாறு நிகழப் போகின்றது எனத் தெரியும் என நான் அறிய வந்துள்ளேன். அவ்வாறாயின், முப்படைகளுக்கும் தளபதி என்ற ரீதியில் நீங்கள் நமது படைகளை உஷார் நிலையில் வைத்தீர்களா? அப்படி வைத்திருந்தீர்களானால் எவ்வாறு ஏப்ரல் 19 அன்று நிகழ்ந்த அழிவுகளைத் தடுக்க முடியாது போயிற்று? நீங்கள் நாட்டு மக்களுக்குப் பொறுப்புடன் பதில் சொல்ல வேண்டும் என்று கேள்விக் கணைகள் தொடுக்க ஆரம்பித்தார்.

தேர்தல் சமயத்தில் இறங்கிய இந்த இடி வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்த கதையாகப் போகப் போகின்றது என்று அஞ்சியது பொ.ஐ.மு. இந்த விடயத்தின் முழு அர்த்தமும் சிங்கள் மக்கள் மத்தியில் ஆழப் பதிய அவகாசம் கொடுத்தால் ஒன்று தமது யுத்தம் மூலம் சமாதானம் என்ற கோஷத்தினைப் பொய் என்று உணர்ந்துவிடுவர், அடுத்தது நாட்டுக்காக உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கும் ஆயுதப் படையினரின் உயிரைப் பற்றி அக்கறைப்படாது பொறுப்பின்றி நடந்து கொண்டதாகக் கருதத் தொடங்கி

**சஞ்சயன்**

விடுவர். சிகல 'உறுமய இந்தக் கோதாவுக்குள் குதிதத்த தென்றால் இன்னும் அனர்த்த மாகிவிடும். எல்லாம் சேர்ந்து பொ.ஐ.முன்னணிக்கெதிரான ஒரு எதிர்ப்பு அலையைக் கிளப்பி விடக்கூடும் என்று கிலி பிடித்துக் கொண்டது.

நோர்மையற்ற அரசியலில் தலையைக் காப்பாற்ற வேண்டுமெனில் ஒரேயொரு வழிதான் உள்ளது, அதுதான் 'திசைதிருப்பு' உபாயமாகும். ஒரு விடயம் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது இன்னொரு வேதாளத்தை, அது பொய்யோ உண்மையோ, அவிழ்த்துவிட வேண்டும். இதனால் முன்னாலுள்ள பிரச்சினையை விட்டு எல்லோரும் புது வேதாளததிற்குப் பின்னால் ஓட ஆரம்பிப்பார்கள். அவ்வாறு பொ.ஐ.மு அவிழ்த்துவிடட்ட புது வேதாளமே ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே எழுதப்பட்ட இரகசிய ஒப்பந்தம் ஆகும்.

பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த இரகசிய ஒப்பந்தத்தின் நகலை வெளியிட்டார். இது எதிர்வரும் தேர்தலையொட்டி இணங்கப்பட்ட விடயங்களென்றும், தேர்தலுக்கு முன்னும் பின்னும் என்ன நிலைப்பாட்டினை எடுக்கவேண்டும் என்று இரு தரப்பினரும் தீர்மானித்துள்ளனர் என்றும் விளக்கமளித்தார். ஆனால்.....இனித்தான் இந்த ஆவணம் உண்மையா போலியா என்பதை அறிய விசாரணைகள் முடுக்கி விடப்படப் போவதாகவும் (ஆகவே அவர்கள் வெளியிட்ட ஆவணத்தினை உறுதிப் படுத்தாமல் மாநாட்டைக் கூட்டியிருக்கிறது அரசாங்கம்) கூறினார். அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவிற்கு குறைந்தது ஒரு கையெழுத்தினை உறுதிப்படுத்த எவ்வளவு காலம் தேவையென சிரிப்பு முட்டினாலும், நமது நாட்டில் அரசியல் வீழ்ந்திருக்கும் அதாள பாதாளத்தினை நினைக்கும் போதுதான் கவலை மூழ்கின்றது. இனியென்ன பொ.ஐ.மு ஐ.தே.கட்சியை நோக்கிச் சுட்ட, ஐ.தே.க இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்க இப்படி சுற்றிச் சுற்றிப் போக, விடுதலைப் புலிகளுடன் நேர்மையான முறையில் இந்த அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லையென்ற உண்மை இந்த இராட்டினத்தில் அடிபட்டுப் போகும். தேர்தல்களுக்குப் பின்னால் பத்திரிகைகளில் இந்த ஆவணத்தினை உறுதிப்படுத்த முடியவில்லையென்ற ஒரு சிறிய செய்தி பிரசுரிக்கப்படும். அல்லது அதுவும் பிரசுரிக்கப்படாது, சிங்கள மக்களும் அதைப்பற்றி மறந்து போய்விடுவார்கள். பிரதம மந்திரியின் ஊடகவியலாளர் மாநாட்டில் முக்கியமான இன்னொரு அறிவித்தலும் வெளிவந்தது. நோர்வே அரசாங்கம் ஆரம்பித்து வைத்திருக்கின்ற பேச்சுவார்த்தைகளைப் பற்றி ஒரு பத்திரிகையாளர் கேள்வி எழுப்பிய பொழுது திரு விக்கிரமநாயக்க நோர்வே நாட்டவர்கள் தங்களுக்கு விருப்பமான எதையும் செய்து கொண்டு போகட்டும், ஆனால்

(11 பக்கம் பார்க்க)

# மெல்ல நகரும் ஓயாத அலைகள்....!

**கர்னணின் கள ஆய்வு**

**தினக்கதிர்**
**சஞ்சிகைப் பக்கம்**
THINAKKATHIR ILLUSTRATED WEEKLY
07-10-2000

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஒட்டு சுட்டான் பகுதியில் ஆரம்பமாகிய விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் -3 இராணுவ நடவடிக்கை மூன்று கட்டமாக முன்னெடுக்கப்பட்டாலும் அது இறுதியில் ஆணையிறவு பெருந்தளத்தைபுலிகள் கைப்பற்றியதுடன் முடிவுக்கு வந்திருந்தது.

இக்காலப்பகுதியில் தான் புலிகள் யாழ் நகரின் வாசல் வரை நின்று தமது அடுத்த கட்ட தாக்குதலை தொடுப்பதற்காக கள நிலவரங்களை அவதானித்து கொண்டிருந்தனர்.இக்காலத்தில் புலிகள்ஆயுதரீதியான தாக்குதல்களை மேற்கொள்ளாவிடினும் இராணுவத்துக்குஎதிரான உளவியல்தாக்குதலை மேற்கொண்டே இருந்தனர்.

யாழ் குடாநாட்டில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் வெளியேற கால அவகாசம் கொடுத்திருந்த புலிகள் எங்கே? எப்போது? தமது தாக்குதலை மேற்கொள்வார்கள், என்ற அச்ச உணர்வு படையினரை எந்நேரமும் விழிப்பு நிலையில் வைக்கச் செய்திருந்தது.

ஆன்ால் எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் இலங்கை அரசுக்கு விடுதலைப் புலிகள் மீதான ஒரு இராணுவ வெற்றியை பெற்றுக் கொள்ள வேண்டிய ஓர் அவசர தேவையை ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கை இராணுவத்தின் அதி உயர் இராணு மூலோபாயத்துடனும் அண்மையில் பல கோடி ரூபாய் செலவில் வாங்கிக் குவிக்கப்பட்ட அதிநவீன இராணுவ உபகரணங்களுடனும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட 'ரிவிஹிர' ராணுவ நடவடிக்கைகள் இராணுவத்திற்கு போதியவெற்றியை அளிக்கவில்லை.

ஓயாதஅலைகள் தாக்குதல் மூலம் கொழும்புத் துறை பகுதியை கைப்பற்றியிருந்த புலிகள் வசம் இருந்து மீண்டும் கொழும்புத்துறை பகுதியையும், சாவகச்சேரி பகுதியையும் இராணுவம் மீளக் கைப்பற்றிக் கொண்டது. ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றினோம் என்ற வகையில் சாவகச்சேரிப்பகுதியை கைப்பற்றினோம் என்றது இராணுவத்திற்கு ஒரு வெற்றியாக கருதப்பட்டாலும் அதற்கு கொடுக்கப்பட்ட விலை மிக மிக அதிகமாக இருந்தது. ஆனாலும் அந்த வெற்றி தொடர்ச்சியாக ஒரு வாரம் கூட நிலைக்கவில்லை.

கடந்த 26-09-2000 அன்று



ஆரம்பமாகிய விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் 4 சாவகச்சேரி மீதான இராணுவ வெற்றியை குழிதோண்டி புதைத்து விட்டது.


விடுதலைப் புலிகள் ஆனையிறவுஇராணுவ முகாமைக் கைப்பற்றிய பின்னர் அதில் இருந்தஇராணுவத்தினர் அனைவரும் பின் நகர்ந்து கிளாலி கடற்படைத்தளத்துடன் இணைந்து அதனை ஒரு மிகப்பெரும் இராணுவமுகமாக விஸ்தரித்திருந்தனர். அதே வேளை கிளாலியில்தொடங்கி எழுதுமட்டுவான் ஊடாக நாகர் கோயில் வரை ஒரு இராணுவ வேலியையும் அமைத்திருந்தனர். சுமார் 15000 இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த இவ் இராணுவ வேலி யாழ் நகர் நோக்கிய புலிகளின் கண்டி வீதியூடான நகர்வுக்கு பூட்டுப் போட்டதைப்போன்று அமைந்திருந்தது.

புலிகள் கோரதீவு, சங்குப்பிட்டி ஊடாக கடல் வழியாக கொழும்புத்துறை, அரியாலை போன்ற கரையோர பிரதேசங்களில்நிலை கொண்டிருந்தாலும், கொடிகாமம் மிருசுவில் எழுதுமட்டுவான்போன்ற பகுதிகளில் அமைந்திருந்த இராணுவ பெருந்தளங்களும் கிளாலி

(11 பக்கம் பார்க்க)


வயிற்றோட்டமா?
பாவியுங்கள்
பிரவுண்சன்
அரரூட் மாவு.
வைத்தியர்கள் என்றும் பரிந்துரைப்பது
ARROWROOT POWDER
STOP STOMACH DISORDER
BROWNSON INDUSTRIES
139, BANKSHALL STREET,
COLOMBO -11.
TEL : 327197 FAX : 458507





சமாதானத்தின் பெயரால்
உரிமை சாகடிக்கப்படக்கூடாது.
உரிமையின் பெயரால்
சமாதானம் வாழவைக்கப்பட
வேண்டும்.
பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி

# எதிர்ப்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும்

அவனால்விடை பெற முடியவில்லை.

பேச முடியாதவாறு நாக்கு தொண்டையினுள் இழுத்துக் கொண்டது. பிரயாண நேரமும் நெருங்கிக் கொண்டிருந்ததால் "சூட்கேசை" கையில் எடுத்தவாறு ஒருமுறை தலையை நிமிர்த்தினான் ஹஸன்.

ஒரு புறம் அவனை வழியனுப்ப வந்த உற்றார் உறவினர்களும், நண்பர்களும் சோகம் படர்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். மறுபுறம் அவனது மூத்த சகோதரி மற்ற தங்கைகள், தாய்..... எல்லோரும் அவனது முகத்தைக்கூட நிமிர்ந்து பார்க்காமல் குனிந்து கொண்டே மௌனக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள்.

கையிலிருந்த "சூட்கேஸை" தன்னருகிலிருந்த மேசையில் வைத்த ஹஸன் தன் உம்மாவை நெருங்கினான். அவனால் எதனையும் கூறி விடை பெறமுடியவில்லை. ஒருவாறு மனதை திடப்படுத்தி, தன் கண்களிலிருந்து கண்ணீரையும் லேஞ்சினால் ஒத்திக்கொண்டு "உம்மா....." என்றான்.

நீண்டநேரமாக குனிந்திருந்த தலையை நிமிர்த்திப் பார்த்த உம்மாவிடம்,

"நான்போயிட்டு வாறன்...." என கவலை நிறைந்த தொனியில் கூறிமுடித்தான்.'.......... ஸ்ஊ..........'

"அல்லாட காவலா போயிட்டு வாங்க மகன். எங்களப்பத்தி கவலப்படாமல் சந்தோஷமாக இருக்கப்பாருங்க. போன உடன காகிதம் ஒண்டு எழுதிப் போட்டுடுங்க."

இது ஹஸனின் தாய் ஜெமிலாவின் குரல்.

தாயின்ஆறுதல் வார்த்தைகளையும் கேட்டு விட்டு தன் சகோதரிகளை அனுகிய ஹஸன், "இஞ்சப்பாருங்க, ஏன் அழுதிட்டிருக்கீங்க....? நான் உங்களை விட்டு விட்டு அங்கேயே இருந்திடுவேனா?.....இன்ஷா அல்லாஹ் இரண்டு வருடத்திற்கு பின் திரும்பி வரத்தானே செய்வேன்.....எனக்காக துஆச் செய்து கொள்ளுங்கள்.... நான் வெளிநாடு போகவேனும். உலகம் சுற்றிப்பார்க்க வேணும் என்ற ஆசைகளோடா இருந்தேன்.? என்ன செய்யலாம். எமது குடும்ப கஷ்ட நிலையால் தான் எனக்கு இந்த நிலை. இருந்தாலும் எமக்கொரு நல்ல காலம் பிறக்காமலா விட்டிடும்...என்னபத்தி கவலைப் படாதீங்க.நான் சந்தோஷமாகப் போயிட்டு வாறன் என்று கூறி பதிலுக்காக காத்திராமல் மேசையிலிருந்த 'சூட்கேஸை' கையில் எடுத்து கொண்டு வீட்டை விட்டு புறப்பட்டான். ஹஸன். அது வரையில் பேச வாயில்லாதிருந்த மரினாவால் அதற்கு மேலும் அழுகையை அடக்க முடியவில்லை.சப்தமிட்டே அழத்தொடங்கிவிட்டால்.

அவள்தான் ஹஸனுக்கு மூத்த சகோதரி. தான் கட்டிளம் பெண்ணாக வீட்டில் இருப்பது தான் எல்லோருக்கும் கஷ்டத்தை கொடுக்கின்றது. என்ற ஏக்கம் அவளுக்கு.

சகோதரன் போவதையே வைத்தகண்வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏன் அவள் மட்டுமா.....?? வீட்டிலுள்ளஅனைவரும் ஹஸனின் உருவம் மறையுமட்டும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆண்டவா,என்து மகனை எந்த பிரச்சனையுமில்லாமல் சேர்த்து விடு" என்றவாறு தன் முந்தானையை உயர்த்தி 'துஆச்' செய்தாள் ஜெமீலா.

பெற்றெடுத்த மனமல்லவா, அப்புறம் பொன்தான் குவிந்திடுமென்றாலும் பிரிந்திட தன் மகனை கேட்டிடுமா மனம் மட்டும்.

அவள்ஹஸனை வெளிநாடு அனுப்பி பொருள் சேர்க்க வேண்டும், பொன் சேர்க்க வேண்டும் என்றா இருந்தாள். என்ன செய்யலாம் மனித சக்திக்கு அப்பால் விதி என்ற ஒன்று உள்ளதே......அதனை மட்டும்'...... .ஸ்ஊ...............'

ஏக்கப் பெருமூச்சை வெளிவிட்டு ஆறுதலடைந்த தாய் ஜெமீலா தன் அருகில் நின்று கொண்டிருந்தசின்னவள் நுசைராவிடம் தன் புடவை முடிச்சில் இருந்த ஐந்து ரூபாவை அவிழ்த்தெடுத்துபள்ளிவாயல் உண்டியலில் சேர்த்துவிட்டு வருமாறு கொடுத்தனுப்பினாள்.

வீட்டு வாசற்படியிலிருந்து நேராக முன் வீதிக்குச் செல்லும் சிறு ஒழுங்கை நெடுங்கிலும் சென்று விட்ட ஹஸன் வீதிக்கு ஏறி தன் உருவத்தை மறைத்துக் கொள்ளுமுன்ஒருமுறை வீட்டுப்பக்கம் திரும்பினான்.

அவர்களும் அதையே எதிர்பார்த்தார்கள். விடைபெற மனமின்றி கண்ணீர் சிந்திய கண்கள் பளபளக்க தன் கையை இலேசாக அசைத்து விடை பெற்றான் ஹஸன். பாவம்.....அவன்

குடும்பத்தில் மூத்த பிள்ளையாக..... அதுவும் தாய்க்கு தலைமகனாக பிறந்திட்டால் பொறுப்புக்கள்என்பது சொல்லாமலேயே தலைமேல் ஏறிவிடும்.



இதுதவிர்க்க முடியாததுதான். கூடவே இக்காலத்தில் சீதனம் என்ற ஒரு பேயாட்டமும் உண்டல்லவா? இதனால் மிகுந்த பொறுப்புக்கள் உள்ளவனும் தன்னை அந்த வாழ்க்கை வரம்புகளுக்கு ஈடு கொடுக்க முடியாது போகும் சந்தர்ப்பத்தில் மாய்த்துக் கொள்வதுண்டு.

புனித இஸ்லாத்தின் போதனைகளை மீறி நடப்பதால் இன்று சமுதாயம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எத்தனை... எத்தனை...??

குடும்பத்தில் ஒன்றுக்கு இரண்டு மூன்றுபெண் குழந்தைகள் பிறந்திட்டால்....ஆசைக்கொரு ஆண்குழந்தைமட்டும் இல்லாதிருந்திட்டால்...அப்புறம் அந்த பெற்றோர்களின் ஏக்கப் பெருமூச்சு இருக்கிறதே.....ஒரே தடவையில் உடம்பிலுள்ள காற்றுக்களை வெளிச்செலுத்தி விடும் அளவுக்கு நீண்டதாகி விடுகிறது.

ஹஸனின் குடும்பமும் இதற்கு மாற்றமானதல்ல.

உரியகாலத்தில் ஹஸன் படிப்பை முடித்திருந்ததால் அதன் பின்குடும்பநிலையை கருத்தில் கொண்டு ஒரு வேலையில் அமர்ந்திருந்தால்இந்நிலை வந்திருக்காது.

ஆனால், இந்நாட்டில் ஏமாற்றப்படுபவர்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் வரையில் ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்.

ஆம்..இதே தோரனையில் ஏமாற்றப்பட்டவன் தான் ஹஸன்.

தனது எதிர்பார்ப்புக்கள் அத்தனையும்......ஏமாற்றப்பட்டு...ஹஸன் விரக்தி நிலைக்கே தள்ளப்பட்டு விட்டான்.

அவனும் தன் இளம் வயதிலேயே படிப்பை முடித்துக் கொள்ளும் வேளையில் தான் அந்த நாடாட்சி மன்ற தேர்தலும் நடைபெற ஆயத்தமானது.

ஹஸன் தேர்தலில் போட்டியிடவில்லை. போட்டியிட்ட வேட்பாளருக்கு, அவரின் கட்சிக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவனாக சொற்பகாலத்திலேயே கவர்ந்திழுக்கப்பட்டிருந்தான். இதனால் இவனதுபொழுதுகள் அத்தனையும் இதிலேயே வீணடிக்கப்பட்டது.

இறுதியில் ஹஸனைப் போன்ற இளம்தியாகிகளின் அயராத முயற்சியின் பயனாய் தேர்தலில் வெற்றிபெற்று உயர் பதவிகளை வகிக்கும் நிலைக்கு அந்த கட்சி உயர்ந்து விட்டது. அந்த வேட்பாளரும் தற்போது.......??

ஆனால், அன்றைய ஹஸன் தான் இன்றும் சாதாரண ஹஸனாகவே இருக்கின்றான். இப்படி எத்தனை ஹஸன்கள் தான் வாழ்வில் முன்னேற்றமின்றி ....தாம் கழித்த பிரயோசனமற்ற ஒவ்வொரு நிமிடத்தையும் பற்றி சிந்தித்து......

எத்தனையோ தடவைகளில் தன் ஆவணங்களை எடுத்துக் கொண்டுவேலைக்காக நாயலைச்சல் அலைந்திருக்கின்றான்.

முடிவு ஒன்றுமில்லை.அலைந்ததும், நடந்ததும், பைலைத்தூக்கிக் கொண்டு திரிந்ததும் தான் மிச்சம்...??

ஒரு நாளா...? இரண்டு நாளா...? இல்லை.... இரண்டு வருஷங்கள்....24, மாதங்கள்.....104 வாரங்கள்....இன்னும் சொல்லப்போனால் 728 நாட்கள் அலைந்தான்.

இறுதியில் அவனது கால்கள் தானாகவே ஓய்ந்து விட்டன.

இருந்தாலும், எதிர்பாராத சிலருக்கு புதிய நியமனங்கள் கிடைத்திருப்பதையிட்டுத்தான் அதிருப்பியடைந்தான் ஹஸன். இந்த புதிய நியமனத்தையும் இதேகட்சிதான் வழங்கியிருக்கிறது என்பதை அறிந்து இன்னும் அதிர்ந்து போனான்.

இவ்வாறே நிலைமை

## நமது சிறுகதை

தொடர்ந்தால் இவ்வளவு காலமாகநாம் எதிர்பார்த்திருந்தது.....??

ஹஸனால் ஆவேசம் கொள்ளாமல்இருக்க முடியவில்லை.

"இரவோடிரவாக பொலிஸ"க்கும், எதிர்கட்சிக்காரர்களுக்கும் பயந்து நோட்டீஸ் ஒட்டிய எமக்கில்லாமல், நாம் ஒட்டிய நோட்டீஸ்களை கிழித்து வீசி, எம்மை விரட்டியவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது......' "........ஸ்ஊ........"

அவனை அறியாமலேயே நீண்ட பெருமூச்சொன்றை விட்டான் ஹஸன்.

தன் எதிர்பார்ப்புகள் முழுவதும் ஏமாற்றப்பட்டிருப்பதை இப்போது தான் உணர்கின்றான்.

அரசியலும், அரசியல் வாதிகளும்.......??

"..........ச்சீ......" நன்றி கெட்ட மனிதர்கள்"

"ஒருகட்சியில் சேராத வன் அறிவாளி

ஒருகட்சியில் சேர்ந்தவன் முட்டாள்"

என்ற தத்துவ மொழியின் அர்த்தத்தைஉணர்ந்து தனக்குள்ளேயே வேதனைப்பட்டான். தன்னாலேயே தனக்கேற்பட்ட இந்தக் கதியை நினைத்து மனம் நொந்தவனாகவே ஹஸன் இறுதி முடிவுக்கு வந்தான்

அவனால் இதற்கு மேலும் யோசித்து.இன்னும் அவர்களுக்குப் பின்னுக்கு அதே பைலை தூக்கிக் கொண்டு தொங்கித் திரிவதற்கு அவனது வீட்டு பொறுப்புக்கள் இடம் கொடுக்கவில்லை.

ஹஸனின் மனம் ஒருவித விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டது. என்ன தொழிலானாலும் பணம் சம்பாதித்தால் போதும் என்றாகிவிட்டது அவனுக்கு.

இதனால் அத்துடன் தனது வேலை தேடும் படலத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தான் ஹஸன். இறுதியாக,

தோட்டவேலை ஒன்றுக்காக வெளிநாடு செல்வதற்கு அவனுக்கு எல்லாம் முடிவாகி விட்டது.

**எரூர்-ஸன்**

தன்னை வழியனுப்ப பஸ் நிலையம் வரை வந்த நண்பர்களுடன் கடைசித் தடவையாக விடை பெற்றுக்கொள்ள பஸ் தனது பயணத்தை தொடர்ந்தது கொழும்பு நோக்கி. ஆனால்,

ஹஸனின் மனச் சிட்டு மட்டும்வீட்டில் உற்றார்,..... உறவினர்கள்..... தாய்.....தந்தை..... சகோதரிகள்....அனைவரையும் சுற்றியே சிறகடித்துக் கொண்டிருந்தது.

*(யாவும் கற்பனை)*

# பிணக்கு.........

## மினிக் கதை

கார்த்திகைத் திருவிழா ஒரேநாளில் ஒரே நேரத்தில் சகல இந்து ஆலயங்களிலும் நடைபெறுவது போலான ஒரு நாள் தான் தேர்தல் திருவிழா. ஆனால் அதற்கான முன்னேற்பாடுகள் ஒரு மாத கால களேபரமாகத் தொட்ங்கி விட்டிருந்தது.

ஏனைய நாட்களெல்லாம் பக்தர்களே சாமியைத் தேடி கோயிலுக்குப் போவதுதான் வழக்கமென்றாலும், திருவிழாக் காலங்களில் மட்டும் ஒருநாள் உற்சவ மூர்த்தியே எழுந்தருளி தெரு வீதியெங்கும் வலம் வந்து பக்தர்களை ஆசீர்வதிப்பார்.

அது போலொரு சடங்கு தேர்தல் திருவிழா காலங்களிலும் வந்து போவது வழக்கம். உற்சவ மூர்த்திகளெல்லாம் ஒவ்வொரு திக்காய்ப் புறப்பட்டு வீதிவலம் வருவதோடு நின்றுவிடுவதில்லை. வீடுகளுக்கும் சென்று ஆசீர்வதிப்பது வழக்கம்.

போர்க்காலச் சூழலால் மிக நீண்ட காலமாக நிகழாதிருந்த இந்தப் பேருற்சவம் இந்தத் தடவை வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றதென்னவோ உண்மைதான்.

அப்படியானால் போர் ஓய்ந்து விட்டதென்று அர்த்தமா.?

அல்ல; அல்ல; போர் உச்ச கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் இப்படியொரு வேட்டைத் திருவிழா தொடங்கியிருப்பதுதான் ஆச்சிரியமான ஆச்சரியம்!

முகம் தெரியாதவர்கள் கூட முகம் மலர்ந்து சிரிக்கின்ற காலம் இதுவென்றால் திகைப்பாயில்லையா?.

இப்படியோர அந்நியோன்னியம் இதுவரை எங்கதான் தொலைந்து போயிற்றோ? ஒரு புறம் மெய் சிலிர்க்கிறது; மறுபுறம் மனது வெடிக்கிறது.

இந்த இக்கட்டுக்குள்தான் வீட்டுக்குள்ளேயே ஒரு மற்போர் வெடித்திருக்கிறது. எங்கே குத்து வெட்டில்போய் முடியுமோ என்று அம்மாவுக்குப் பயமோ பயம்!

பெரியண்ணன் பரிதிக்கும், சின்னண்ணன் களிறுக்கும், அத்தான் புட்டுவத்துக்குமெனப் பிரச்சார வேட்டைக்குப் புறப்பட்டு விடுகிறார்கள். வேலைவெட்டி இல்லையென்றால் இது கூட ஒரு விளையாட்டோ, என்னவோ?

அம்மா வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தவிக்க, அப்பாவோ ஒன்றமேயறியாதவர் போல் சாய்வு நாற்காலியில் பத்திரிகைகளுக்குள் மாறி மாறி முகத்தைப் புதைத்துக்கொண்டு அமுங்கியிருக்கிறார். எப்போ ஓய்வு எடுத்தாரோ, அன்று முதல் - ஏன், அதற்கு முன்னரே பத்திரிகையென்றால் அப்பாவுக்கு ஏக குஷிதான்.

ஒரே ஒரு தடவை சொல்லிப் பார்த்தார். 'நீங்கள் உங்கள் வாக்குரிமையை யாருக்காவது பயன்படுத்துங்கள். அதற்காக குடுமி கட்டி மல்லுக்கு நிற்க வேண்டாம்.' என்று ஒருவரும் கேட்பதாயில்லை. அவ்வளவோடு அப்பா தன் பேச்சை முடக்கிக் கொண்டார்; கதிரைக்குள் முடங்கிக் கொண்டார்.

"தம்பி, நீங்கள் ஒண்டுக்கை ஒண்டு ஒற்றுமையாய் ஒரே வீட்டிலை இருக்க வேண்டியனீங்கள், இப்படி ஆராருக்காகவோ அடிபட்டு என்னத்தைக் காணப் போறியள்? ஒரு வீட்டிலை ஒருதாய் பிள்ளையள், மருமக்களாய் ஒண்டாயிருக்க வக்கில்லை, பிறகெப்படி ஒரு நாட்டிலை வெவ்வேறு மொழி, கலாசாரம், பண்பாடு, மத வழிபாடு கொண்ட மக்கள் ஒற்றுமையாய் வாழ்றது? இந்தப் பிரச்சினையால் நாடுதான் நசுங்கிக் கிடக்கிறதெண்டால் வீடுமா? நாறிக் கிடக்க வேணும்? புரிந்துணர்வோ, மனமாற்றமோ வராமல் களிறோ, பிளிறோ புட்டுவமோ, தட்டுவமோ வந்தென்ன? கதிரவன் திசைமாறி மேற்கே உதித்தாலும் ஒருபோதும் சமாதானம் வரப்போறதில்லை. வேண்டாம் பிள்ளையள்..... விட்டிடுங்கோ....."

பீரங்கிகள் முழங்காத ஒரு குறையாய், அப்பா ஒரு பிரச்சாரப் பிரசங்கமே செய்து முடித்தார்.

**- வீக்கேயெம் -**

அத்தானின் முகத்தில் கலவரம் படர்ந்தது. சின்னண்ணனிடம் மன்னிப்புக் கேட்பதா விடுவதா என்ற அவர் சங்கடப்படுவது நன்றாகவே புரிந்தது.

அவரின் அகத்தின் கோலத்தை அறிந்தோ என்னவோ சின்னண்ணாவே முந்திக் கொண்டான்.

"அத்தான்! அப்பா சொல்லிறதிலும் நியாயமிருக்குத் தானே.... நாங்கள் பிளவுப்பட்டால் நாளைக்கு நாலுபேர் நாக்க வழிப்பினம். வேறென்னதான் பெரிசாய் வந்திடப்போகுது?"

அத்தானின் சங்கடத்தைச் சின்னண்ணாவே தீர்த்து வைத்தான்.

அப்பாவைப் பார்த்தேன். அவர் முகம் ஒளிர்ந்தது. அம்மாவின் கண்களில் பெருகுவது என்ன..........? ஓ அது........

*(யாவும் கற்பனை)*

ஊர்வலம் ........ வார சஞ்சிகை

# மட்டக்களப்பின் சரித்திரப்புகழ் வாய்ந்த டச்சுக் கோட்டை

3

*சென்ற வார தொடர்ச்சி.........*


**போர்த்துக்கேயக் கோட்டை ஒல்லாந்தரால் (டச்சு) கைப்பற்றப்பட்டது**

கோட்டையை கைப்பற்றுவது சம்பந்தமாக "பிலிப்ஸ்' போல் டேய்ஸ்" எழுதிய நூல் பின்வருமாறு கூறுகிறது. கண்டி அரசன் சென்ரதன் இறந்த பின் அவனது மகன் 2ம் இராஜசிங்கன் தனக்கு உதவி புரியும்படி டச்சுக்காரருக்கு தூது அனுப்பினான். இதனை ஏற்றுக் கொண்ட ஒல்லாந்தர் வோட்டோ மாஸ்ரனிற் **(VOWTO MASTRISNT)**, ஹரட்வைக் **(HARADEWYK)**, றொட்டர்டாம் **(ROTTER DAM)**, வேறே **(WERE)**, ஆகிய 4 போர்க் கப்பல்களையும் க்ளெயின் எங்ஹீவைன் **(KLEYN ENKAHUYEN)** எனும் துப்பாக்கிக் கப்பலையும் கப்பற் தளபதி அடெம் வெஸ்ரர் வோல்ட் தலைமையில் அனுப்பி வைத்தார். அக்கப்பலில் அதிகாரிகள் போர்வீரர்கள், மாலுமிகள் உட்பட எல்லோருமாக 840 பேர் புறப்பட்டனர். அவர்கள் 1638ம் மே மாதம் 10 ம் திகதி மட்டக்களப்பை வந்தடைந்தனர்.

உள்ளூர் பொதுமக்களைப் பயமுறுத்தி, துன்புறுத்தியது மட்டுமல்லாமல், சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களையும், தீர்த்தனராம். மே 18ம் திகதி மட்டக்களப்புக் கோட்டையை ஒல்லாந்தர் முற்றுகையிட்டனர். 4 மணி நேரம் துப்பாக்கி வேட்டுக்கள் பரஸ்பரம் தீர்க்கப்பட்ட பின் கோட்டைக்குள்ளிலிருந்து போர்த்துக்கேயர் வெள்ளைக் கொடியைத் தூக்கி உயர்த்திக் காண்பித்தனர். அதனைத் தொடர்ந்து 2 போர்த்துக்கேய அதிகாரிகள். முதலில் வெளி வந்தனர். வெளிவந்தவர்களுடன் ஒல்லாந்து தளபதி வெஸ்ரர் வோல்ட் பேச்சுக்கள் நடாத்தினார். இறுதியில் போர்த்துக்கேயர் சரணாகதியாகப் போவதாக கேட்டுக் கொண்டனர். இவ்வாறு சரணடைந்த போர்த்துக்கேயரின் எல்லா ஆயுதங்களையும் கோட்டைக்குள் இருந்து டச்சுக்காரர் கைப்பற்றிக் கொண்டனர். அதே நேரம் கோட்டைக்குள்ளிருந்து கைது செய்யப்பட்ட 100 உள்ளூர் வாசிகளுள் 50 பேர் ஒல்லாந்துப் பிரபுக்கு பணி செய்யவென அனுப்பப்பட்டனர். மிகுதி 50 பேரை கண்டியரசன் ஒருவனின் பிரதாணியின் கொலையுடன் தொடர்புபடுத்தி கழுமரத்தில் ஏற்றினர்.

போர்த்துக்கேயர் கோட்டை ஒல்லாந்தரால் புனரமைக்கப்பட்டது.

இவர்கள் மட்டக்களப்பில் இருந்த போர்த்துக்கேயரை முற்றாகத் துரத்திவிட்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்டிருந்த சிறிய கோட்டையை 1682ல் பெரிதாகவும், பலமுள்ளதாகவும் கட்ட ஏற்பாடு செய்தனர். இவ் வேலை 1684ல் பூர்த்தியானது. ''கடிக்கல்'' (சொறிக்கல் / குட்டைகல்) கொண்டு கட்டப்பட்ட இக் கோட்டை மீண்டும் கடிக்கல் கொண்டு பலமாக்கப்பட்டு 1780ல் புதுப்பித்தனர் என அவ்வறிஞர் எழுதியுள்ளார்.



**கோட்டையின் வெளிச்சத் தூண்**

இதுவே இன்று நாம் காணும் கச்சேரிக் கோட்டையாகியது.கச்சேரி ஆரம்பித்த பின்னர் காலத்திற்குக் காலம் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டாலும் அதன் பிரதான கட்டிடம் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இன்றும் உள்ளது.

போரத்துக்கேயரிடமிருந்து மட்டக்களப்புக் கோட்டை ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டபோது "கொஸ்ரா" என்னும் தளபதியின் தலைமையில் 100 போர் வீரர்கள் பங்கு கொண்டதாக ஒரு குறிப்பு உள்ளது. ஆனால் போரில் பங்கு கொண்ட வீரர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் எனப் பேசப்படுகின்றது.



**சிதைவடைந்த கோட்டைச் சுவர்**

இத் தாக்குதலின் போது கோட்டைக்கு வடக்கே தற்போது மோர்சாபிட்டி என்றழைக்கப்படும் இடத்திலேயே ஒல்லாந்தர் முகாம் அமைத்து அங்கிருந்து பீரங்கிகளால் கோட்டையைத் தாக்கினர் எனவும் அறியமுடிகின்றது. "மோர்சா" **(MORSER)** என்றால் ஒல்லாந்தரின் மொழியில் பீரங்கி எனப் பொருள்படும். எனவே இவ்விடம் பின்னர் "மோர்சாப்பிட்டி" என அழைக்கப்பட்டது என்கிறது ஒரு நூல்.

**கோட்டையீன் அமைப்பு**

சுற்றிவர அகலமான மதிலை உடைய இக்கோட்டை கடிக்கல்லால் அமைக்கப்பட்டது. இக் கோட்டையைச் சுற்றி வடக்கு கிழக்கு ஓரங்களில் மட்டக்களப்பு வாவியும், தெற்கு, மேற்கு ஓரங்களில் ஆழமான அகழியும் கட்டப்பட்டுள்ளது. பின்னர் தற்காலத் தேவை கருதி கோட்டையின் கிழக்கு வாசலுக்கு தார் ரோட்டும், மேற்கு வாசலுக்கு கப்பி ரோட்டும் போடப்பட்டுள்ளதையும் பலர் அறிவீர்கள்.

கோட்டையின் 4 மூலைகளிலும் ஒரு போர் வீரன் மறைந்து நிற்கக் கூடிய அளவில் காவற் கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. தென்கிழக்கு மூலையில் "நாலே கால்" குண்டுபோடும் நேரத்தை அறிவித்த பீரங்கியும், வெளிச்சத் தூணும் உண்டு. சுமார் 20 அடி உயரமான மதில் சுவரின் மேல் 8 அடி அகலமான பாதையொன்றும் உண்டு.

இப் பாதையில் நடந்தபடியே கோட்டையைச் சுற்றி வரலாம். கோட்டையின் நாற்புறமுமுள்ள இயற்கைக் காட்சிகளை ஒரு அழகிய பெண்ணைப் போல எப்போதும் ரசித்துக் கொண்டிருக்கலாம்.

சுற்றிவரவுள்ள மட்டக்களப்பு வாவியும் பக்கத்தே தெரியும் கல்லடிப் பாலமும், பரந்த ஆகாயமும், சூரியக் கதிர்கள் பட்டுத்தெரிக்கும் அந்த மெல்லிய அழகும் மனதை விட்டு நீங்காத காட்சிகளாக விரியும்.

கோட்டையின் உள் அமைப்பும் கவனத்தற்குரியதாகும். பிரதான கட்டிடம் மேல்மாடி கொண்ட வில் வளைவான கத்வுகளும், சாளரங்களும் உள்ளன. முற்பகுதியில் சுமார் 20 அடி உயரமுள்ள பாரிய உருண்டை வடிவமுள்ள தூண்கள் கட்டிடத்தைத் தாங்கி நிற்கின்றன.

மேல் தளத்திற்கு தடித்த மரப்பலகைகள் பரவப்பட்டுள்ளன. அவ்வாறே மேல் மாடிக்குச் செல்லும் மரப்பலகைகள் பரவப்படடுள்ளன. அவ்வாறே மேல் மாடிக்குச் செல்லும் மரப்பலகைகளால் அமைக்கப்பட்ட படியுமுண்டு.

கீழ்ப்புற அறையினுள்ளே ஒரு பாரிய அறையுள்ளது! இருட்டறையாகக் காணப்படும் இவ்வறைக்குள் சூரிய வெளிச்சம் வருவதற்காக மதிலின் மேற்புறம் "சிறிய வெளிகள்" கூரைகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி அறையிலிருந்து வெளிச்சம் வெளிச் செல்லும் சுரங்கப் பாதை முற்றாக அடைக்கப்பட்டுள்ளது. கோட்டையின் கிழக்கப் புற வாசலின் இரு புறமும் இரண்டு பழைய பீரங்கிகள் அலங்காரமாக வைக்கப்பட்டுள்ளன. கோட்டை மதில் சுவர் ஒன்றில் பிரதான வாயிலை விட வேறு இரு வாசல்கள் செங்கல்லினால் மூடிக் கட்டப்பட்டுள்ள அடையாளத்தைப் பார்க்கும் போது நன்கு தெரிகிறது.

கோட்டையின் வடகிழக்கு மூலையில் படகுகள் வந்து தரித்து நிற்பதற்கேற்ற ஒரு இறங்கு துறையும், வழிச்சுவர்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விடத்திலிருந்து கல்லடித்துறை கூப்பிடு தூரத்திலுள்ளது. பஸ்போக்குவரத்து ஆரம்பிக்க முன்னர் மட்டக்களப்புப் பட்டினத்திற்கு கால் நடையாகவும், மாட்டு வண்டிகளிலும், வள்ளங்களிலும் இத்துறையால் நகருக்குச் சென்றனர். கல்லடிப் பாலத்தினூடாகச் சுற்றி வருவது மேலதிகமாக 21/2 கிலோமீற்றர் தூரமாகும்.



**ஒல்லாந்த தளபதியின் சமாதி**

கோட்டையின் மேற்குப்புற அகழிக்குள் சரக்கு வள்ளங்கள், படகுகள் வரக் கூடிய வகையில் அகழியின் இரு கரையிலும் கொங்கிறீட் கட்டுகள் அமைக்கப்பட்டு படகுகளைக் கட்டி வைப்பதற்காக சிறு தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை பிற் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம்.

கோட்டையின் மேற்கு வாசலின் அருகே ஒரு பழைய சமாதி காணப்படுகின்றது. இது ஒரு தளபதியினுடையது அல்லது ஒரு கெப்டனுடைய சமாதியாக இருக்கலாம். எழுத்துக்கள் அழிந்துவிட்டபடியால் விபரம் அறியமுடியவில்லை.

**பராமரிப்பு :-**

இக்கோட்டை இன்னமும் தொல்லியற் திணைக்களத்தின் பராமரிப்பிலேயே இருந்து வருகின்றது. ஆண்டுதோறும் இதன் பராமரிப்புக்காக தொல்லியல் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்கின்றது. இப்பணத்தைக் கொண்டு கோட்டை மதில் சுவர்களில் புல் பூண்டுகளை அழித்தல் "றம்பார்ட்டை" சுத்தம் செய்தல் போன்ற வேலைகள் வருடம் தோறும் நடைபெறுகின்றன.

''றம்பார்ட்டை'' என்பது கோட்டை சுவரின் தென்மேற்கு மூலையில் பரந்த வெளியாக உள்ள இடமாகும். இவ்விடத்திற்குச் செல்வதற்குப் படிகள் அமைக்காமல் சரியான மலைப் பாதை போல் அமைக்கப்பட்டுள்ளது.

**க.ஜெகதீஸ்வரன்**


முன்னர் தேர்தல் காலங்களில் இவ்விடத்திலிருந்தே தேர்தல் முடிவுகள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக்குப் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி இடம் பெற்றது. இக்காலத்

(11ம் பக்கம் பார்க்க)

அழகுசுப்பிரமணியம் சத்தியநாதன்
அரசியல் விடிவானில் ஓர் இளஞ்சூரியன்

தமிழர் விடுதலைக் கூட்டணி
மட்டக்களப்பு மாவட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில்
தொழில்நுட்பக் கல்லூரியை
விருத்தி செய்திட
எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வை
ஆதரிப்போம்.
எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தேசிய ஐக்கிய முன்னணி

# தினக்கதிர் சினிமா

## கவுத்துட்டாங்களே

### நடிகைகள் மீது விவேக் கடுப்பு

கனகா, சங்கவி, சுவாதி, விந்தியா மீது கடுப்பாக உள்ளார் 'ஜோக்கர் விவேக். அவர் நடிக்கும் 'எங்களுக்கும் காலம்வரும்" படத்தில் ஜோடியாக நடிக்க இந்த நடிகைகளை தயாரிப்பாளர் அணுகியுள்ளனர். இந்த நடிகைகள் நான்குபேரும் சொல்லிவச்சமாதிரி விவேக் ஜோடியாக நடிக்க மாட்டோம் என்று சொல்லி விட்டனர். இதை தயாரிப்பாளர் வெளியில் சொல்லவில்லை என்றாலும் இவர்கள் மறுத்த விஷயம் தெரிய வர விவேக் கடுப்படைந்து விட்டார். 'நடிப்பு தொழிலுக்கு வந்துட்டு இப்படி பாகுபாடு பார்ப்பவர்கள் நிச்சயம் முன்னேற முடியாது. அவர்களோட இந்த நிலையால்தான் யாரும் சீண்டாமல் வீட்டில் முடங்கிக் கிடக்கவேண்டிய நிலை யில் உள்ளனர்" என்கிறார்.



பிரியாத வரம் வேண்டும் படத்தில் பிரசாந்த், ஷாலினி

## பிரியமானவளே

'குஷி" படத்திற்கு பிறகு விஜய் ரொம்ப 'குஷியாக உள்ளார். அவர் அடுத்து நடித்து வெளிவர வுள்ள 'பிரியமானவளே படம் வியாபார ரீதியாக லாபம் கிடைக்க வழி செய்துள்ளதாம். படமும் நன்றாக வந்திருப்பதால், இதுவும் வெற்றிப்படமாக அமையும் என்று உறுதியாக நம்புகிறாராம். இதற்காக படத்திற்கு திட்ட மிட்ட செலவை விட பல லகரங்கள் கூடுதலாக செலவு செய்து சில காட்சிகளை அவசர, அவசரமாக எடுத்து முடித்துள்ளார்கள் என்கிறது கோலிவுட் வட்டாரம்.

## இந்த படம் கலக்கும்

படத்துவக்க விழா அன்றே அந்தப்படம் 100 நாட்கள் ஓடும் என ஜோசியம் சொல்லியுள்ளார் சத்தியராஜ். அவர் நடிக்கும் ''மிஸ்டர் நாரதர்' படத்தின் துவக்க விழா சமீபத்தில் சென்னை யில் நடந்தது. இதில் அவர் கலந்துகொண்டு பேசும் போது, 'படத்தின் கதை நல்லா இருக்கு. காமெடியில் நான் கலக்கபோறேன். இது ரசிகர் கள் எல்லாரையும் கலக்கும். படம் நிச்சயம் 100 நாட்கள் ஓடும்" என்று கூறினார். சத்தியராஜ் பேசியதை கேட்ட தயாரிப்பாளர் 'நடி கர் சொன்னது நடக்கணும்" என்று சொல்லி மிகவும் சந்தோஷப் பட்டுக் கொண்டார்.

## அஜீத் படத்தில் அட்டகாசமான அடிதடி

''தீனா' படத்தில் அஜீத்திற்கு அடியாள் கேரக்டர். இருந்தாலும் அந்த கேரக்டர் மூலம் பலருக்கு அவர் நன்மைசெய்வதாக காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளது. இவரது மற்ற படங்களைவிட இந்தப் படத்தில் சண்டைக்காட்சிகள் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்தியில் இருந்து ஸ்டண்ட் ஊழியர்கள் தேர்வு செய்யப்பட்டு அழைக்கபட்டுள்ளனர். வடபழனியில் உள்ள ஷாப்பிங் காம்ளக்ஸில் இந்த படத்தின் சண்டைக்காட்சி 4 நாட்கள் எடுக்கப்பட்டது. இதற்காக தயாரிப்பாளர் ரூ.15 லட்சம் செலவு செய்துள்ளார். தயாரிப்பாளர் பணத்தை பற்றி கவலைப்படாமல் தாராளமாக செலவு செய்வதாக கோலிவுட் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

## திரை விமர்சனம் - இளையவன்

புதுமுகம் சத்தியன் ஹீரோவாக நடித்துள்ள படம். படம் முழுக்க மாநகர பஸ்சில் நடக்கும் ஒரு காதல் கதை.

பஸ்சில் யாரோ ஒருவன் கவுசல்யாவை இடிக்க சத்தியன் தான் இடித்தான் என்று தவறாக நினைத்து அனைவர் மத்தியிலும் 'பொறுக்கி என்று சத்தம் போடுகிறார். அன்று முதல் சத்தியனுக்கு நித்திரை போகிறது. அதாவது காதல் ஆரம்பமாகிறது. கல்லூரி படிப்பை தூக்கி தூர வைத்து விட்டு காதல் கடிதம் எழுதி கவுசல்யாவுக்கு கொடுப்பதையே முழு நேர வேலையாக செய்கிறார்.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாக அவமானப்படுத்துகிறார் கவுசல்யா. கடைசியில் கவுசல்யாவுடன் பஸ்சில் வரும் ஸ்ரீவித்யாவிடம் சத்தியன் கெஞ்சுகிறார். நான் அவளை உயிரினும் மேலாக காதலிக்கிறேன். மணந்தால் அவளைத் தான் மணப்பேன் என்றுக் கூற, ஸ்ரீவித்யா அவரை கோயிலுக்கு வரச் சொல்கிறார்.



மின்னலே படத்தில் மாதவன், ரீமாசென்

அங்கு அவருக்கு கவுசல்யா ஏற்கெனவே திருமணமான விதவை என்று உண்மைத் தெரிகிறது. அத்துடன் சத்தியன் விடவில்லை. அதனால் என்ன நான் உன்னை மணக்கிறேன் என்று இன்னும் அடம் பிடிக்க கதை மேலும் சிக்கலாக செல்கிறது. கடைசியில் சத்யனும், கவுசல்யாவும் திருமணம் செய்து கொள்கிறார்களா? இதுதான் இளையவன்.

சினிமாவுக்குள் இன்று நுழைபவர்கள் எவ்வளவோ முன்னேற்பாடுகள் செய்து கொண்டு வருகின்றனர். ஆனால், தனது அப்பாவே ஒரு தயாரிப்பாளர் என்பதாலோ என்னமோ சரியான பாடம் தெரியாமல் களத்தில் இறங்கி விட்டார் ஹீரோ சத்தியன். சில சோகக் காட்சிகளில் கூட தியேட்டரில் சிரிப்பலை வருகிறது. சத்தியன் சண்டைக் காட்சிகளில் பரவாயில்லை. இன்னும் இவர் கொஞ்சம் பயிற்சி எடுத்துக் கொண்டு களத்தில் இறங்க வேண்டும்.


கவுசல்யா இதே போன்ற கதாபாத்திரம் பல படங்கள் செய்து விட்டார். இருந்தாலும் கரண் உடன் வரும் அந்த சில காட்சிகளில் நிறைவான நடிப்பைத் தருகிறார். கொஞ்ச நேரமே வந்தாலும் கரண் அனைவர் மனதிலும் இடம் பிடித்து விடுகிறார்.



ஹூட்டு படத்தில் ரோஜா, மும்தாஜ்

தேவையே இல்லாத ஒரு கதாபாத்திரத்தில் தலைவாசல் விஜய். பொன்னம்பலம் கடைசியில் நிமிர்ந்து நிற்கிறார். வையாபுரி மட்டுமே கொஞ்சம் சிரிக்க வைக்கிறார். சிவகுமார் நெகிழ்ச்சியான பாத்திரத்தில் வந்து கலங்க வைக்கிறார்.

இளையராஜா இசையில் அனைத்து பாடல்களும் இனிமை. ஒளிப்பதிவு சிறப்பாக உள்ளது. கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி உள்ளார் டி.பாபு. இவரும் புதுமுகம் தான். திரைக்கதை வசனம் நன்றாக உள்ளது. மொத்தத்தில் இளையவன் பரவாயில்லை ரகம்.





ஏழை எளிய குடும்பங்களின் கஷ்டத்தை போக்க !
நீதி நேர்மையாக சேவை செய்யவும்!!
கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்திட!!!

ஆறும் ஆறும் தீர்வை உருவாக்கும்

முன்னாள் சமூர்த்தி பணிப்பாளர்

மாசிலாமணி நடேசராஜா அவர்களுக்கு எங்கள் வாக்கு;



X

6

# பாராளுமன்ற பொதுத்தேர்தல் — 2000

## மட்டக்களப்பு மாவட்டம்

எனது அன்பு வந்தனங்கள்.......!

**பாராளுமன்றப் பொதுத் தேர்தல்**

**10 — 10 — 2000 ல்**

**நடைபெறவுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.**

எனவே

- யுத்தத்தை நிறுத்தவும்,
- விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தவும்,
- கௌரவமான அரசியல் தீர்வைப்பெறவும்,
- நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தவும்,
- தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் தலை நிமிர்ந்து நடக்கவும்,
- பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தவும்,
- சகல சமூகங்களுக்கிடையே சமாதானத்தையும், புரிந்துணர்வையும் கூட்டுவாழ்வையும் உறுதிப்படுத்தவும் ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை நம் சந்ததியினருக்கு வழங்கவும்,

*நாம் அனைவரும் ஐ.தே.கட்சிக்கே வாக்களிக்கவேண்டும்.*



யுத்த நிறுத்தத்தையும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையையும் வலியுறுத்தும் ஐ.தே.க. தலைவர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களுடன் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் அலிஸாஹிர் மௌலானா.

## மக்களை வினவுகிறார். மண்ணினது மைந்தர் !

தளிர்த்து நிற்கும் தமிழ் முஸ்லிம் உறவு மேலும் தரம்பெற்று தழைத்தோங்க வேண்டாமா?

பெயரளவில் தரமுயரும் வைத்தியசாலை செயலினிலே உயர்ந்து நிற்க வேண்டாமா?

கல்விகற்கும் கூடங்களின் வளங்கள் ஓங்கி கற்றவரின் தொகை பெருகவேண்டாமா?

கிழக்கிழங்கை வளாகமது மேலும் பல துறைகள் கண்டு துலங்கி நிற்கவேண்டாமா?

உறுகாமக் குளக்கட்டு உயர்ந்து நின்று விவசாயம் விரித்தியுற வேண்டாமா?

கடற்றொழிலால் காலந்தள்ளும் மீனவர் கவலையெல்லாம் தொலைந்து போக வேண்டாமா?
தொழில் நுட்பத்துறையினிலே மட்டுநகர் விழிப்புற்று எழிச்சிபெற வேண்டாமா?

அல்லலுறும் அகதிகளின் அவலம் நீங்கி வளமான வாழ்வு பெறவேண்டாமா?

மின்சார வசதியற்ற பகுதிகளையெல்லாம் ஒளிபெற்றுக் களிப்படைய வேண்டாமா?

தொழிலற்ற இளைஞரது வாட்டமெல்லாம் தொலைந்தோடி மகிழ்ச்சி பொங்க வேண்டாமா?
வீடில்லாப் பிரச்சினைகள் விட்டகன்று விமோசனம் வாழ்வினிலே வேண்டாமா?

உன்னிச்சைக்குளத்திட்டம் மேன்மைபெற்று முழுமாவட்டமும் குழாய் நீரால் குதூகலிக்க வேண்டாமா?

சுகாதார நிலைமைகள் சீர்பெற்றோங்கி சுபீட்ச நிறை வாழ்க்கையது வேண்டாமா?

போக்குவரத்து வசதிகள் செம்மைபெற்று நலமுடனே நாம் நடமாட வேண்டாமா?

வயோதிபர், விதவையர், அனாதையரின் ஏக்கம் நீங்கி ஏற்றம் பெறவேண்டாமா?


அனைத்துப்பகுதிகளும் செழித்து மக்கள் அன்பினால் பிணைந்திட வேண்டாமா?

தேவைகளை நேரடியாய்ச் சொல்வதற்கு சேவையாற்றும் மகனொருவன் வேண்டாமா?


வேண்டுமென்பதே விடையென்றால் தாண்டுங்கள் உங்கள் சிந்தனையை !



அலிஸாஹிர் மௌலானா செய்யது
3




பேரின்பராஜா சத்தியமூர்த்தி ராஜன்
7




தம்பிராசா ஜெயக்குமார்
6



அப்துல் மஃரூக் உமர்லெவ்வை
1




சித்திரப்போடி மாமாங்கராஜா
8




அரசரெட்ணம் சசிதரன்
2




காசுபதி பூபாலரெட்ணம்
5



கணபதிப்பிள்ளை சிறிராம்
4





## யானைக்கு வாக்களிப்போம் யாவற்றையும் பெற்றிடுவோம்.

முதலாவது புள்ளடியை (X) யானைச் சின்னத்திற்கு நேரே இடவேண்டும்.

உங்களது மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றை எனது இலக்கமான **3** இற்கும் மற்றைய இரண்டு விருப்பு வாக்குகளையும் நீங்கள் விரும்பும் ஏனைய இரண்டு வேட்பாளர்களின் இலக்கங்களுக்கும் அளித்து ஐ.தே.க.யின் வெற்றியையும், எமது வேட்பாளர்களின் வெற்றியையும் உறுதிப்படுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

-அலிஸாஹிர் மௌலானா *(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)*

தயாரிப்பு: ஏறாவூர் நிருபர் - அகமட் கபீர்

# கவிதா தேசம்

தயாரிப்பு:
வி.மைக்கல்கொலின்

## தேவை 'வங்கர்' ஒன்று!

அதிரடித் தாக்குதல்களுக்குள்
அகப்பட்டுத் தவிக்கும் நான் இன்று!
அடுத்த நாட்டுக்கு 'வீசா' எடுத்தவனைப் போல் - என்னை
'அமத்தி' விட ஆள்மாறி ஆள்
ஆயத்த நிலையில் படையெடுப்பு!
ஆரம்ப முளிவியளம் 'அண்ண' என்றழைக்கும்,
அப்பா வயதொத்த கன்ரீன்காரன்.
அட்டகாசமாக அப்பக்காரி,
அடுத்த கேற்றில் பஸ் நிற்க நிற்பாள்.
அரிசிக்காரி திண்ணையில் உண்ணாவிரதமிருப்பாள்.
அழுகல் மீன் தந்தவனும் அச்சொட்டாய் நிற்பான்.
அசுப்பில்லாமல் கடைக்காரனும் காத்து நிற்பான்.
அலைந்து, அலைந்து சீட்டுக்குச் சேர்த்தவள்,
அகங்காரமாய் பேசி வார்த்தையால் அறைவாள்.
அடுத்த மாதம் குஞ்சுக்கு
'அச்சா' சட்டை என்று சொன்னதால்,
அழுக்குச் சட்டையுடன், அன்புக் குழந்தையும்,
ஆசையுடன் நாய்க்குட்டிப்போல் புன்னகையால்
ஆகிரமித்து கழுத்தில் வந்து தொங்கும்.
அதுவே சுருக்காகி மனசை தொடும்.
ஆசிரியர் சொன்ன ஒப்படைக்காக
அருந்தவ புதல்வன் தந்த
அந்த நீளப் பட்டியல் 'பக்கற்றில்' தூங்க
அடிதடிக்கும் அஞ்சாமல் மூக்கால் சிணுங்குவான் அவன்.
அடுத்த வீட்டு கல்யாண 'காட்' - நீதிபதி
ஆணையாக அச்சுறுத்தும். பிடிவிறந்தாகி தலைமறைவாக்கும்
அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 'றவுண்டப்புகளில்' தப்பி.
அண்மைய புத்தக வெளியீடுகளில் இருந்து கழண்டு,
அனைத்துத் தேவைகளினதும் பாதுகாப்பும் கிள்ள, கிள்ள,
அஞ்சாறு ஐநூறு தேற, 'அம்மா, தாயே'
அமைத்துத்தான் தாராயோ 'வங்கரொன்று'
அனைவர் கண்களிலும் மண் தூவ நீயே தஞ்சமென்று,
அவளிடம் சரணடைய, 'ஆடி அமாவாசைத் தீர்த்தம்'
அம்மா, அப்பா ஆத்மசாந்திக்கென்று
அடம்பிடித்து அழுது, அமிர்தகளிக்கு விசேட வஸ்சுமுண்டென்று
அரை அவியல் மரக்கறியுடன் அவசரமாகின்றாள் அவள்.
ஆதவனே உன்னிடம் ஒரு விண்ணப்பம்
ஆபத்தான இந்த சமபள நாள் முழுக்க நீ அஸ்தமி!

**வள்ளிமைந்தன்**

## தமிழினத்தை.........!

காட்டினிலும் மேட்டினிலும்
கல் சுடும் றோட்டினிலும்
கூட்டினிலும் குழியினிலும்
கொல்லுகிறார் தமிழினத்தை.....!

இளமையிலும் முதுமையிலும்
இச்சை கண்ட பின்னாலும்
எச்சைத் துப்பிப் போகிறார்
எரிக்கிறார் தமிழினத்தை..........!

வேதனையில் சோதனையில்
வெம்பி வெம்பிச் செத்தாலும்
விடுதலை' இல்லையென்று
விரட்டுகிறார் தமிழினத்தை..........!

பயணத்திற்கும் பாஸ் எடுத்து
துயரத்தோடு செல்லுகையில்
பல சோதனைச் சாவடிகள்
வைத்து
பதம் பார்க்கிறார் தமிழனத்தை....!

ஆயுதமும் ஆளணியும்
அயல் நாட்டில் பெறுவதற்கு
அளவற்ற வரியெடுத்து
ஆட்டுகிறார் தமிழினத்தை..........!

மோதல்களும் பொய்
முறைப்பாடுகளும்
மோசடித் தேர்தல்களும்
பரவிப் பரவியங்கே
பாதிக்கிறது தமிழினத்தை..........!

போரும் பேரின வாதமும் ஓர்நாள்
பொய்த்தே போகும் பின்னர்
எல்லோரும் ஒருவரேயென்று
எழுதுவார் தமிழினத்தை...........!

**இரா.லோகேஸ்வரன்**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**

## உனக்கு மட்டுமா ?

இன்னுமொருவனின்
மரணத்தில் தான்
உனக்கு வாழ்வென்று
கற்றுத் தந்த
உன்-
குருவைக் கூட்டி வா!

அவன் முகத்தை
மனிதத் துப்பல்களால்
துப்புரவு
செய்யவேண்டும்.

உன்
ஆறடி உடம்புக்கு
ஆறாயிரமடி நிலமா?
எங்கே கொண்டு
என்ன செய்வதற்கு!

உன்
ஒரு சாண் வயிற்றுக்கு
ஆயிரம் கிலோ உணவா?

நாளையைப்பற்றி
இன்று யோசிக்க
உனக் கென்ன தகுதி?

நாளை
விடியப்போவது
உண்மையிலும் உண்மை
ஆனால்
நீயில்லாமல் விடிந்தால்....?

உலகம் உனக்கும் தான்
ஆனால்
உனக்கு மட்டுமல்ல
மற்றவர்களும்
வாழவேண்டும்.

**மருதமுனை எம்.எச்.ஏ.கரீம்**

## எதுவும் நீயே!

எழுதிவிட்டு மடித்து வைக்கின்ற
கவிதையல்ல - நீ !
இன்று பூத்து நாளை வாடுகின்ற
மல்லிகையல்ல - நீ !
என் நாடி நாளமெங்கும்
உரசிப் போகின்ற உதிரத்துளி நீ!
இதயத்தில் தூறல் போடும்
மழை மேகம் நீ !
உனைக் காண்பதற்கு
கண் இரண்டும் போதாது.
உன் கூந்தல் அசைவுக்கு
எந்த நதியும் பொருந்தாது.
உன் பேச்சில் இருந்து தான்
இலக்கியமே பிறக்கின்றது.
உன் நிழலின் தானே
வெய்யிலே குளிர் காய்கிறது.
ஆக மொத்தத்தில் ஒட்சிசன் கூட
உனைத் தானடி சுவாசிக்கிறது.

**அ.கோகுலதீபன்**

## இதயத்தில் நீ !

காலமெல்லாம்
உன்னை எந்தன்
இதயக்கருவில்
சுமப்பதால்.......
பத்து மாதம்
சுமந்த உந்தன்
தாயை விட
உயர்ந்தவள் நான்!"

**அ.ஸ்ரெல்லாபாரதி**
**புதுமுகத்துவாரம்**



# செழியனின் டைஜஸ்ட்

4

**எளிமையான பெண்கள் :-**

எல்லா வயது பெண்களும் - முக்கியமாக திருமணமான பெண்கள் - ஆண்களைவிட வாழ்க்கையில் அதிகத்தை எதிர்பார்க்கின்றனர். என வல்லுநர்கள் ஒப்புக் கொள்வதாகத் தெரிகிறது. புரிந்து கொள்ளக் கூடிய வகையில் விதவைகள், மணவிலக்கு செய்யப்பட்ட பெண்கள், திருமணமாகாத மூதாட்டியர் போன்றோர் சில சமயங்களில் தனிமையாய் உணர்கின்றனர். ஆனால் திருமணமாகி மகிழ்ச்சியாய் இருப்பதாக தோன்றும் குடும்பப் பெண்களைப் பற்றிய தென்ன? உதாரணமாக 40 வயதான ஒரு பள்ளி ஆசிரியையிடமிருந்து வரும் இந்தப் புலம்பலைக் கவனியுங்கள்." நண்பர்களோடு செலவு செய்ய எனக்கு நேரமில்லை. அந்த இழப்பை நான் மிகவும் உணருகிறேன். அதைச் சொல்லுவதற்குக் கூட எனக்கு சங்கோஜமாக இருக்கிறது. தனிமையாய் உணர்வதைப் பற்றி நான் எவ்வாறு உணர முடியும்......? மொத்தத்தில் மிகவும் நல்ல ஒரு திருமண வழ்க்கையையும் அருமையான பிள்ளைகளையும், அழகான வீட்டையும் எனக்குப் பிடித்த ஒரு வேலையையும் நான் கொண்டிருக்கிறேன். நான் சாதித்தவற்றைக் குறித்துப் பெருமை கொள்ளுகிறேன். ஆனாலும் ஏதோவொன்று குறைவுபடுகிறது."

**முகர்ந்ததும் காதல்:-**

மலர்விட்டு மலர்தாவி பறந்து திரிந்து இங்குமங்குமாக சிறிதளவு தேனை உறிஞ்சி தன் இஷ்டம் போல சூரிய ஒளியில் வெயில்காயும் வண்ணத்துப்பூச்சி ஒரு கவலையற்ற ஜீவன் அதன் வாழ்க்கைபாணி நமக்கொரு சிறந்த எடுத்துக்காட்டு வண்ணத்துப்பூச்சிகள் காதல் விவகாரம் சுவாரசியமானது. மிக அவசரமான தேவையானது ஒரு துணையைக் கண்டடைவதாகும். சில வாரங்களுக்கு மேல் நீளக்கூடிய ஆயுத எதிர்பார்ப்பை அபூர்வமாகவே கொண்டுள்ளதால் காலந் தாழ்த்தாமல் இதைச் செய்தாக வேண்டும். வண்ணத்துப்பூச்சி உலகில் ஒரு துணையைக் கண்டடைவது அவ்வளவு சுலபமான வேலையுமல்ல. அது நீண்ட பொறுமையை தொடர்ந்த முயற்சியையும் தேவைப்படுத்துகிறது. வண்ணத்துப் பூச்சிகள் ''கண்டதும் காதல்'' என்பது அறியப்படாத ஒன்று. அவை தங்களுடைய கிட்டப் பார்வைக்கு நன்கு அறியப்பட்டவையாய் இருக்கின்றன. மிகவும் அடிக்கடி வேறு இனத்தைச் சேர்ந்த ஒன்றைத் தங்களுடைய சொந்த இனத்தைச் சேர்ந்த ஒன்று தப்பாக எண்ணி விடுகின்றன. பயனற்று முடிவடையும் தேடுதலுக்கு இது அடிக்கடி விழா நடத்துகிறது. தன் கண்கள் தன்னை ஏமாற்றிவிட்டன. என்று இறுதியில் அந்த வண்ணத் துப்பூச்சி காதலன் உணருகையில் தேடுதல் முடிவுக்கு வருகிறது. வாழ்க்கையை இன்னும் அதிக கடினமாக்கவதற்கு அந்தப் பெண் வண்ணத்துப்பூச்சி வழக்கமாகவே மசிவதில்லை. மிக்க ஆர்வமுள்ள ஆண் விடாப்பிடியாக ஓர் அதிவேக ஆகாய சுழற்சி நடன பாணியில் அவளைச் சுற்றிச் சுற்றி பறக்கிறது. அப்படியாவது அவள் இறுதியில் மனமிரங்கமாட்டாளா என்ற நம்பிக்கையில்தான். ஆனால் அந்தப் பெண் வண்ணத்துப பூச்சி ஏமாற்ற மடைந்த ஆண் தனது துணைக்கான வேட்டையைத் தொடரும்படி விட்டுவிட்டுப் பறந்து போகும்போது இந்தக் கண்கொள்ளாக் கூட்டு நடனங்கள் வழக்கமாகவே திடீரென முடிவடைகின்றன.

**உடைகள் வந்த விதம் :-**

முதன் முதலாக விலங்குகளின் தோல்கள் தான் ஆடைகளாக அணியப்பட்டன. பிறகு பறவைகளின் இறகுகள், இலை, தழைகள் போன்றவை மரவுரிகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஊசி கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, மனிதன் ஆடை தயாரிக்கக் கற்றுக் கொண்டான். மேலும் கம்பளிகளையும், விலங்குகளின் முடிகளையும் திரித்து நீண்ட நார் போலச் செய்யத் தெரிந்து கொண்டான். நைல் நதிப் படுக்கையில் பருத்தி தோன்றியது. அதில் இருந்தும் மெல்லிய சணலில் இருந்தும் இழைகள் எடுத்து துணிநெய்யத் தெரிந்து கொண்டவன் அன்றைய எகிப்திய மனிதன். ஆனால் துணிநெய்வது ஒரு கலையாக வளர்ந்தது நம் நாட்டில்தான்.

**சாந்திக்கு வழி :-**

நாவை அடக்கியவன் நன்கு விவாதிப்பனை விடமேலானவன். மனத்தை அடக்கியவன் இராஜாதிராஜனை விட அதிகம் ஆற்றல் வாய்ந்தவன் தன்னை வென்றவன் தேவர்களிலும் மிக்கவன். மனத்தை நடுநிலையில வைத்திருக்க நல்லறிவு வேண்டும் என்கிறார் சித்பவானந்தர்.

**முதலையின் தற்குணம் :-**

முதலை வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு நீரிலிருந்து கரைக்கு வந்து வெய்யிலில் படுத்து இளைப்பாறும். அப்போது அது எந்தப் பிராணிக்கும் தீங்கு இழைக்காது. அப்போது அதன் உடல் மீதுள்ள பூச்சி புழுக்களைப் பிடித்துத் தின்ன சிறுசிறு குருவிகள் பறந்து வந்து அதன் வாய்க்குள் கூடப் புகுந்து விடும். அப்போதும் முதலை அவற்றை ஒன்றும் செய்யாது. ஆனால் அது நீருக்குள் போய் விட்டாலும் நீரிலுள்ள ஜீவராசிகளைப் பிடித்து விழுங்குவதோடு நீர் குடிக்க வரும் பிராணிகளையும் பிடித்து விழுங்கிவிடும். முதலை தன் உணவை வாயில் அடைத்துச் சாப்பிடுவதில்லை.

**கிரிக்கற் :-**

கிரிக்கற் எங்கும் கிரிக்கற் பகல் முழுவதும் கிறிக்கற் பாடசாலைகள் தோறும் கிரிக்கற் விளையாட்டுக்கு ஆங்கிலேயர்களே முன்னோடிகள். நமது நாட்டிலும் இவ்விளையாட்டுப் பற்றிப்பிடிக்காமலில்லை. 1881 ஆண்டில் தான் நமது நாட்டில் இவ் விளையாட்டை அங்கிலேயர் பழக்கினார்கள்.

**பஞ்ச தந்திரம் :-**

பார்ப்பது ஞானமே தவிர கண்களல்ல. நற்குடியைக் குறிப்பது குணமே தவிர பிறப்பு அல்ல மனத்திருப்திதான் செல்வமே தவிர பணம் அல்ல தீய செயல்களிலிருந்து விலகுவதே உண்மை அறிவு.

மகிழ்ச்சி நிறைந்த மனத்தை உடையவர்கள் சகல செல்வங்களும் உடையவர். தோற்செருப்பு அணிந்தவனுக்குப் பூமிமுழுதும் தோலால் போர்த்த மாதிரி இருக்கும்.

பேராசை என்கின்ற வாகனத்தில் ஏறியவனுக்கும் நூறு யோசனை கூடத் தூரமாய்த் தோன்றுவதில்லை. திருப்தி நிறைந்த மனமுள்ளவனுக்கப் பணம் வந்தாலும் அவன் அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**சுவைத்திரன் சிரிப்பு :-**

கொழும்பான் :-
மீன்பாடும் தேன் நாடான உங்கள் நாட்டில் என்ன விசேடம்.

மட்டக்களப்பான் :-
விசேடம் ஒன்றும் இல்லை. மீன்பாடுவதற்கு பதிலாக இங்கே இரவில் நுளம்பு பாடுகிறது.

**(இவ் வாரத்துடன் செழியனின் டைஜஸ்ட் முடிவடைகிறது)**

# படைப்பும் பதிப்புரிமையும்

~ தமிழ்நாடன் ~

**(சென்ற வாரத் தொடர்ச்சி....)**

காட்டு:P 2000 வானம்பாடி இசையகம்.

நூல்வடிவில் வெளியிடப்பெறாத கையெழுத்துப்பிரதிக்கும் பதிப்புரிமைகோரலாம். இவ்வகையில் ஒருபடைப்பின் படிப்பெருக்கம் செய்யப்பெறாத மூலப் படியும் அடங்கும். இவற்றின் பதிப்புரிமை நூலாக வெளியிடப்பெறாதது என்றே பதியப்பட வேண்டும் .காட்டு: Umpublished work c 2000 தமிழ் நாடன்.

பதிப்புரிமை அறிவிப்பின் பிழை, குறை, விடுதல் இவற்றால் திருத்தம் நேரலாம். முதல் அறிவிப்பிற்கு ஐந்தாண்டு கழித்தே திருத்தம் மேற்கொள்ளலாம் (அமெரிக்கப் பதிப்புரிமைச் சட்டம் 1958).

## 7.பதிப்புரிமைக் காலம்

பதிப்புரிமைக்குரிய ஒரு பதிப்பு பகுதி பகுதியாக படைக்கப் பெறும், வெளியிடப் பெறும் எனில் எது வரை பதிப்பு நிகழ்ந்து முடிந்ததோ அது வரையான பதிப்பிற்கே பதிப்புரிமை. பதியப் பெறாத எழுதப்படாத அல்லது வெளியிடப் பெறாத மீதிப்பகுதிக்கு பதிப்புரிமைஇல்லை. கையெழுத்துப் பிரதி எனில் முற்றுப் பெறாதப் படைப்புக்குப் பதிப்புரிமை இல்லை.

ஒரு படைப்பாளரின் ஆயுளுக்குப் பிறகு ஐம்பதாண்டு காலம் வரை அப்படைப்பின் பதிப்புரிமைசெல்லும். கூட்டுப் படைப்புஎனில் இணைப்படைப்பாளர்களில்கடைசியாக இறப்பவரின் ஆயுளுக்குப் பிறகு

(11ம் பக்கம் பார்க்க........)



கவிஞர் பிரபஞ்சப்பிரியன் எழுதும்-

அன்பே
நாம்
எங்கே வாழ்கிறோம்
தினம் ~ தினம்
வெடியோசை கேட்கும்
இந்த யுத்த பூமியில்
நம் ஜீவிதம்!
ஸகியே.......!
காதல் வாழுமா!!
காதல் சேருமா......??

– மைக்கல்

# காதல் வெண்ணிலா கைகளில் சேருமா.......?

அத்தியாயம்-14

நேரம் பன்னிரண்டு மணியைக் காட்டவும் கடைசியாக விரிவுரையாற்ற வந்த அந்த ஆங்கில விரிவுரையாளர் தனது வகுப்பை முடித்துக் கொண்டார்.

அதுவரை மூன்று பேர் மாறி மாறி வந்து விரிவுரையாற்றிச் சென்றிருந்தனர். அன்று கடைசியாக ஆங்கில பாடத்திற்கு வந்திருந்த மகேஸ்வரன் மாஸ்டர் ஆங்கில கவிதைகள் பற்றி படிப்பித்தார். ஷேக்ஸ்பியர், ஷெல்லி, பைரன் என தொடர்ந்த பட்டியலில் ஆங்கில நவீன கவிதை பற்றியும் அவர் கூறினார்.

அன்றைய பாடம் ரதனுக்கும், நிவேதாவுக்கும் மிக பயன்பாடாக இருந்தது. நிவேதாவுக்கு தனது முதல் நாள் வகுப்பே வெகு இன்ரஸ்ட்டாக இருப்பதாகப்பட்டது. தொடர்ந்து அவர் தனது விரிவுரையில் தமிழின் 'புதுக்கவிதை' என்ற வடிவம் ஆங்கில கவிதைகளில் இருந்து தோற்றம் பெற்றது தொடர்பாகவும் அமெரிக்க கவிஞர் ''வால்ட் விட்மன் பற்றியும் அவரின் 'புல்லின் இதழ்கள்'' கவிதைத் தொகுதி பற்றியும் பேசினார்.

அவரது விரிவுரை வெறுமனே ஆங்கில வகுப்பாக இல்லாமல் இலக்கியம் கலந்த ஒரு வகுப்பாக இருந்தது.

'மொடர்ன் பொயட்' எனக் கூறப்படும் புதுக்கவிதை எப்படி ஆங்கிலத்தில் 'பிரிவேர்ஸ், மொடர்ன் வேர்ஸ்' என அழைக்கப்படுகிறது என்பதாகவும் அது தமிழில் ந.பிச்சமூர்த்தி, பாரதியார் சி.சு. செல்லப்பாவின் எழுத்து சஞ்சிகை வழியாக தமிழில் காலூன்றியது தொடர்பாகவும், இலங்கையில் புதுக்கவிதை தமிழில் அறிமுகமாக முன்னரேயே சிங்கள மொழியில் "நிசந்தஸ்" என்ற பெயரில் அறிமுகமாகியது தொடர்பாகவும் அவரது விரிவுரை வெகு சுவாரசியமாக இருந்தது.

ரதனைப் பொறுத்தவரை அவர் கூறிய விடயங்கள் அவனுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும் அவன் அங்கு பல புதிய விடயங்களை அறிந்து கொண்டான்.

அவர் தொடர்ந்து ஆங்கிலபாடலாசிரியர் ஆலன் ஜே.லெனர்பற்றி கூறினார். "பாட்டு எழுத ஒருமாதம் அவகாசம் வேண்டும் என்ற நம்ம ஊர்ப்பாடலாசிரியர்கள் மட்டும் கேட்பதில்லை.

ஆங்கில பாடலாசிரியர் ஆலன் ஜே.லெனரும் ஒரு பாடலின் கடைசிவரியை எழுத இரண்டு வாரம் அவகாசம் கேட்டார்.......

இரண்டு வார முடிவில் "அடின்ட் இட் பி லவர்லி" என்ற அந்த பாடலின் கடைசிவரியை இப்படி எழுதியிருந்தார்.

ஆலன் - 'லவர்லி.........
லவர்லி....... லவர்லி
லவர்லி..'

வகுப்பு முடிந்ததைத் தொடர்ந்து அனைத்து ஜூனியர்ஸ் மாணவர்களும், மாணவிகளும் விரிவுரை மண்டபத்தை விட்டு வெளியே வரத் தொடங்கினர்.

அன்றைய வகுப்பிற்கு புதி தாக வந்திருந்த நிவேதாவை அனைத்து மாணவிகளும் சூழ்ந்து கொண்டனர். பரஸ்பர அறிமுகங்கள் நடைபெற்றன.

விடுமுறைக்கு பின்னர் அன்றே எல்லோரும் சந்தித்துக் கொண்டதினால் மாணவர்கள் மத்தியிலும் ஒரு கலகலப்பு இருந்தது.

கடந்த விடுமுறை தினங்களில் அடக்கி வைத்திருந்த கதைகள் அனைத்தும் அங்கு கொட்டித் தீர்க்கப்பட்டது. அப்படியிருந்தும் அவர்களிடையே ஒரு சிறியதான அச்ச உணர்வு இருந்தது.

மதிய உணவு நேரம் எங்கே சீனியர்ஸ் மாணவர்களிடையே மாட்டுப்பட்டு விடுவோமோ என்ற பயமே அது.

ஜூனியர்ஸ் மாணவர்களுக்கு அன்று 1.00 மணிக்கு நுண்கலைப்பீடத்தினால் நடாத்தப்படும் ஒரு கருத்தரங்கு உண்டு எனவும், அனைவரையும் பிரதான மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு ஒரு அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது.

வகுப்பு முடிந்தவுடனேயே ஏனைய குறூப் மாணவர்களும், மாணவிகளும் அதே இடத்தில் வந்து கூடத் தொடங்கியதால் அவ்விடம் கலகலப்பாக இருந்தது.

நேரம் சென்று கொண்டிருப்பதை அவதானித்த ரதன் தன்னுடன் கதைத்துக் கொண்டிருந்த நண்பர்களிடம் இருந்து மெதுவாக விடைபெற்று நிவேதாவிடம் வந்தான். நிவேதாவும் ரதன் வருவதைக் கண்டு தான் கதைத்துக் கொண்டிருந்த சக மாணவிகளிடம் விடைபெற்று ரதனிடம் வந்தாள். "நிவேதா ஒரு மணிக்கு ''பைன் ஆர்ட்டிஸ்டிப்பாட்மண்ட்'' நடத்துற கருத்தரங்கு இருக்கு எனவே நாம் விரைவாக கெண்டீனுக்கு போய் சாப்பிட்டு விட்டு வருவம் என்ன'' ரதன் சொல்லவும்...

''ஓம்.... ரதன்...... பேசிக் கொண்டிருந்ததில நேரம் போவதே தெரியவில்ல....''

இருவரும் கெண்டீனுக்குச் சென்றனர். ஏனைய மாணவ, மாணவிகளும் கலைந்து செல்லத் தொடங்கினர்.

தமது வீட்டில் இருந்து வந்திருந்த மாணவர்களும், மாணவிகளும் சாப்பாடு கட்டிக் கொண்டு வந்திருந்ததினால் அந்த விரிவுரை மண்டபத்துக்குள் இருந்தே சாப்பிட ஆயத்தமாகினர். ரதன் சொல்லி வைத்தது போலவே முன்னாள் செல்ல அவனுக்குப் பின்னே நிவேதா மெல்ல மெல்ல சென்றாள்.

சீனியர்ஸ் கண்டுவிட்டால் இருவருக்கும் சேர்த்தே 'ராக்கிங்' செய்வார்கள் என்பதனால் அந்த முன்னேற்பாட்டு நடவடிக்கையை கடைப்பிடித்தனர்.

இருவரும் 'கெண்டீனுக்கள்' சென்றதும் ரதன் கெண்டீனின் உட்பக்கம் சென்றான். அதில் அதிகம் பேர் இருக்கவில்லை. ஓரிரு ஜூனியர்ஸ் மாணவர்களே இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ரதன் நிவேதாவை அமரச் சொல்லிவிட்டு கவுண்டருக்கு போய் இரண்டு சாப்பாட்டு பார்சலை எடுத்துவந்தான்.

அது மதியவேளையாக இருந்தால் எல்லோரும் சாப்பாட்டு மும்முரத்தில் இருந்தனர். சீனியர்ஸ்




மாணவர்கள் கூட ஜூனியர்ஸை கண்டும் அதிக அக்கறை எடுக்கவில்லை. அது ஜூனியர்ஸ் மாணவிகளுக்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. "ரதன் இன்றைய எனது முதல் வகுப்பே வெகு இன்ரஸ்டிங்காக இருந்தது.........''

......ஆங்கில் கவிதைகளைப் பற்றிய அந்த வகுப்பு நன்றாக இருந்தது என்ன?

'நிவேதா', மகேஸ்வரன் மாஸ்டர் தனது வகுப்பை வெகு இயல்பாக நடாத்துவார். நீங்க பல வகுப்ப தவறவிட்டிட்டீங்க..... எத்தனையோ முறை டெலிடாமா பற்றியெல்லாம் வகுப்பெடுத்திருக்கார். வெறுமனே பாடங்கள் என்றில்லாமல் பொதுவிஷயங்கள் பற்றியும் கதைப்பார்....'' "ரதன் நீங்க எப்படி...... ஒரே கெண்டீன் சாப்பாடுதான் சாப்பிடுவீங்களா......?''

"ஏன் சாப்பாடு சரியில்லயா.........?'' ரதன் சிரித்தபடி கேட்டான் "பெரிசாக நல்லம் என்று சொல்ல முடியாதுதான் எங்களுக்குப் பரவாயில்லை. ஆனா உங்களைப் போன்ற ஆண்களுக்கு இது காணாதுதானே........???

"இல்லை நிவேதா மேலதிகமாக தேவையென்றா எக்ஸ்ரா சாப்பாடு எடுக்கமுடியும்..... ஆனா இந்த சாப்பாடே எனக்குப் போதும்''

"நான் ஒரே இங்கெடுப்பதில்லை வாரத்தில் அதிகமாக நான் லஞ்ச் டைமுக்கு டவுனுக்குப் போய்விடுவன். அங்க ஒரு வீட்டில ஏற்பாடு செய்திருப்பதால்....... அங்கு....... போய் லஞ்ச் எடுப்பன்.......''? "ரதன்... நான் ஹொஸ்டலில் தான் தங்க வேண்டும் போல இருக்கு....... 'பைன்ஆர்ட்ஸ்' கருத்தரங்கு முடிய ஹொஸ்டல் விஷயம் பற்றி கதைப்பம். என்ன.....'' ''ஓம்...... வெல்லெபாவுக்கு போய் போம் எடுத்துகொடுப்பம்...... நாளைக்கு வந்ததும் செங்கலடியில் உள்ள மக்கள் வங்கி கிளைக்குப் போய்......ஹொஸ்டல் பீஸ் கட்டி வந்து கொடுத்தால் நாளைக்கே ரூமுக்குப் போகலாம்.....''

"ரதன் நாளைக்கு அதிகமாக 'மாமாவும் ரிங்கோ போய் விடுவார் போல தெரிகிறது..... எனவே..... எப்படியாவது நாளைக்கு ஹொஸ்டலுக்குப்போகனும்.........'' "ஏன் சண்முகநாதன் மாமா வீட்டில தங்க முடியாதா நிவேதா......'' "அங்கு தங்கலாம் தான்...... ஆனா....... தினமும் டவுனுக்கு போய் வாறது கஷ்டமா இருக்கும் தானே......... ஹொஸ்டல் வாழ்க்கையை அனுபவிச் சாதானே..... ரதன்..... ஒரு சுகம் இருக்கும்......? நீங்களும் வந்திடுவீங்கதானே........'' "நான் இன்னமும் ஹொஸ்டலுக்கு வாறது பற்றி யோசிக்கல்ல......'' "என்னது..... நீங்க ஹொஸ்டலுக்கு...... வரமாட்டீங்களா..... என்ன சொல்லுறீங்க...... ரதன்...... நீங்க இல்லாமா........ நான் மட்டும் ஹொஸ்டலில் எப்படி தங்க முடியும்....?'' நிவேதாவின் அந்த ஏக்கமும், தவிப்பும் ரதனுக்கு பிடித்திருந்தது. அவன் தனக்காக தனது வருகைக்காக காத்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

தனக்கான வருகையை ஒரு அழகான இளம் பெண் எதிர்பார்த்து இருப்பதும் அவனது அருகாமையை அவள் விரும்புவதும் ஆணுக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கிறது. அதேவேளை அவனுக்கு அவள் மீதான பிடிப்பையும் மேலும் அதிகமாக்குகிறது. அங்கு அப்படித்தான் ரதனின் வருகையை நிவேதா ஆவலுடன் எதிர்பார்த்தாள். அவள் தனது வருகையை எதிர்பார்க்கிறாள் என்பது ரதனுக்கு நிவேதா மீது அதிகமான பிடிப்பை ஏற்படுத்தியது.

அவனது இதய பிரதேசமெங்கும் நிவேதா என்ற மலரின் வாசனை மெல்ல மெல்ல மணம்பரப்பி முழுப் பிரதேசத்தையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

காதலுக்கும் மனம் உண்டு. அதனை மனசு தான் அறியும். நிவேதா மீதான ரதனின் அன்பும் ரதனின் மீதான நிவேதாவின் பாசமும்... மெல்ல மெல்ல..... காதல் கதவுகளைத் திறக்கத் தொடங்கியது. அவர்களை அறியாமலேயே அவர்கள் இருவரும் தமது பேச்சுக்கள் மூலம் நெருங்கிக் கொண்டனர். நேசம் அவர்கள் கண்ணை மறைத்தது. அது அவர்களுக்கிடையேயான தடைகளை அகற்றியது.

இருவரும் சாப்பிட்டு முடிக்கவும் நேரம் 12.45க் காட்டவும் சரியாக இருந்தது. 'கெண்டீன்' வானொலியில் இலங்கை வர்த்தக சேவையின் செய்தி வாசிப்பு ஆரம்பமாகியிருந்தது. ரதன் தனது பார்சல் சுற்றிய பேப்பரையும் நிவேதாவின் பேப்பரையும் ஒன்றாக எடுத்து பக்கத்தில் இருந்த பக்கட்டுக்குள் வீசி விட்டு வந்தான். இருவரும் ஆளுக்கொரு பைப்பில் தமது கரங்களை கழுவிவிட்டு தண்ணீர் அருந்தி விட்டு வந்தனர். ''நிவேதா இப்படியே மெயின் ஹோலுக்கு போவம் அங்குதான் கருத்தரங்கு நடக்கவிருக்கிறது.....'' ரதனைத் தொடர்ந்து நிவேதாவும் சென்றாள்.

"மெயின் ஹோல் களை கட்டியிருந்தது. சகல ஜூனியர்ஸ் மாணவர்களும், மாணவிகளும் அங்கு கூடியிருந்தனர். அவர்களது 'பெட்சில்' கலைப்பிரிவுக்கே அதிக மாணவர்கள் தெரிவாகியிருந்தனர்.

மொத்தமாக பார்த்தால் அங்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கூடியிருந்தனர். அதிலும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் இருந்தும் கலையில் ஆர்வமுள்ள சில மாணவர்கள் வந்திருந்தனர்.

நிவேதாவும் ரதனும் ஹோலுக்கு போய் அமர்ந்த சில நிமிடங்களில் 'பைன் ஆர்ட்ஸ் டிபாட் மெண்டுக்கு' பொறுப்பான கலாநிதி குருமூர்த்தி அவர்கள் வந்தார்.

அனைவருக்கும் வணக்கம் சொல்லி விட்டு அவர் தனது பேச்சை ஆரம்பித்தார்." அப்போது தான் ரதன் அவரை சரியாக பார்த்தான் அவர் வேறு யாரு மல்ல..... ரதனும், நிவேதாவும் திருமலையில் இருந்து ரயிலில் வரும் போது கல்லோயாவில் வைத்து மாறி ஏறிய கொழும்பு ரயிலில் அவர்களுக்கு எதிரே இருந்து வந்த பெரியவர் தான் அவர். பொலநறுவை ஸ்டேசனில் வைத்து அவருக்கும் சேர்த்து யோக்கட் வாங்கி கொடுத்தது ஞாபகத்திற்கு வந்தது. ரதனைப் போலவே நிவேதாவும் நினைத்துக் கொண்டு ரதனைத் திரும்பிப் பார்க்கவும் ரதனும் விளங்கியது போன்று சிரித்துக் கொண்டான்.

கலைப்பிரிவு பற்றியும் கலைப்பிரிவில் உள்ள பாடங்கள் பற்றியும் விளக்கிக் கூறிய அவர் நுண்கலைப்பாடம் தொடர்பாக விளக்கம் கொடுத்தார். பைன் ஆர்ட்ஸ் படிக்க விருப்பமானவர்கள் கையை உயர்த்து துங்கள் என்று அவர் கேட்கவும் 90 % வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், மாணவிகளும் தமது கரங்களை உயர்த்தினர். ரதனும், நிவேதாவும் கூட தமது கரங்களை உயர்த்தினர். தொடர்ந்து அவர் பேசும் போது இன்னும் சில நாட்களுக்கு பின்னர் உங்களுக்கு விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. எனவே இந்த வகுப்பை ஒரு அறிமுகமாக வைத்துக் கொள்வோம் என கூறிய அவர் மனித சமூகம் தோற்றம் பற்றி சிறிய விரிவுரையுடன் மனித ஆரம்பம் பற்றியும் அதன் பரிணாம வளர்ச்சி பற்றியும் பேசிய அவர் ''வால்காவில் இருந்து கங்கை வரை'' என்ற நாவலை வாசித்தவர்கள் உங்களில் யார்? கையை உயர்த்துங்கள்'' என்றார். அதில் ஒருவர் கூட கையை உயர்த்தியதாக தெரியவில்லை. ஆனால் ரதன் அந்த நாவலை வாசித்திருந்ததால் கைகளை உயர்த்தினான். அதனைக் கண்டு கொண்ட அவர் "அந்த நாவலை எழுதியவர் பெயர் என்ன கூறுங்கள் என்றார்.'' ரதன் எழுந்து "ராகுல்ப்சாங்கிரித்தியாயன்'' என கூறவும் அதனை ஆமோதித்த அவர் அவனை அப்போது தான் கண்டார். ரதனை ஏற்கனவே ரயிலில் கண்டஞாபகம் அவருக்கும் வந்திருக்க வேண்டும். மென்மையாக சிரித்துக் கொண்டார். தொடர்ந்து" அவர் ரதனது பெயரைக் கேட்டு அவனை பாராட்டிவிட்டு தனது பேச்சைத் தொடர்ந்தார்...............

நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன.......!

தொடரும்........

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## தேர்தலும் இளைஞர் சமூகமும்

அண்மைக் காலமாக எங்களது ஊர்களின் மூலை முடுக்குகள் பலதும் விழாக்கோலம் பூண்டிருக்கின்றன.

சில வீடுகள் திருமண வீடுகள் போல அலங்கரிக்கப்பட்டுக் கோலாகலமாகக் காட்சியளித்தன. பல வீதிகள் அலங்கார ஜோடனைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இவை தவிரவும், வீதிகளில் தோலங்களும் மதில்களில், சுவரொட்டிகளும் இன்னும் அலங்கார ஊர்திகள், வாகன அணிகளும், ஒலிபெருக்கி வாகனங்களும் என ஊர்முழுக்க திருவிழா கொண்டாடுவது போன்ற ஓர் பிரமை. இத்தனை எடுப்புகளும், இலங்கை அரசு எம்மீது திணித்துள்ள தேர்தலை முன்னிட்டு செய்யப்பட்டவையே.

கடந்த பல தசாப்தங்களாக, ஈழத்தமிழர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இனஒடுக்குமுறைப் போரினால் சிதைவடைந்து சிதிலங்களாகிப் போயுள்ள வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இத்தேர்தல் அவர்கள் மீது திணிக்கப்படுகின்ற ஒன்றே. பாராளுமன்ற ஜனநாயகம் மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை தமிழர்களைப் பொறுத்தவரையில் என்றோ போய்விட்டது,

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் மாறி மாறி ஆட்சிபீடமேறிய கட்சிகள் எவையும் தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கேற்பத் தமிழர் பிரச்சினையைக் கையாண்டனவே தவிர உண்மையில் தமிழர்களுடைய பிரச்சினையை தமிழர்களுடைய நோக்கு நிலையில் நின்று அணுகவில்லை. கால காலமாகக் கிழிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் கைவிடப்பட்ட வாக்குறுதிகளும் இனிமேல் இவர்களை நம்புவதில் பயனில்லை என்ற நிலைக்குத் தமிழர்களை தள்ளிவிட்டுள்ளன.

தமிழர் பிரச்சினையைத் தாம் தீர்ப்பதாகக் கூறிய தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தமிழீழக் கோரிக்கைக்கான ஆணையைத் தமிழர்கள் 1977 இல் வழங்கியிருந்தபோதும், அந்த ஆணை தேர்தல் முடிந்தகையோடு அவர்களால் கிடப்பில் போடப்பட்டு இன்றுவரையில் திரும்பிப் பார்க்கப்படாமல் கிடக்கிறது.

அதன் பின்னர் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னால் தமிழர்கள் அணிதிரண்டு நின்றனர்.* ஆனாலும் இலங்கைப் பாராளுமன்றத்துக்கான தேர்தல்கள் மறுபடியும் மறுபடியும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

விடுதலைப் போராட்டத்தில் குதித்த ஆயுதக் குழுக்களும், பின்னாளில் ஜனநாயக வழிக்குத் திரும்பிய பின்னர் தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றனர். இம்முறை வடக்குக், கிழக்கைப் பொறுத்த வரையில் முன்னெப்போதையும் விட பல அணிகள் அவற்றின் வேட்பாளர்கள் தேர்தலில் குதித்துள்ளனர்.

ஒருபுறம் தமிழர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள போர் இடைவிடாமல் தொடரப்பட்டுக் கொண்டே இருக்க இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலமே தீர்வு காணமுடியும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க கோஷம் எழுப்பிக் கொண்டிருக்க, மறுபுறத்தே எமது தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் தென்னிலங்கைக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களும் தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

எப்பாடுபட்டாவது இம்முறை பாராளுமன்ற ஆசனங்களை பிடித்துவிடவேண்டும் என்ற முழுமுயற்சியில் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் யாவும் தம்மால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்துவருகின்றனர். இங்குள்ள வேதனை என்னவென்றால் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் யாவும் பாராளுமன்ற கதிரைகளை பிடிக்கும் தமது குறுகிய நோக்கத்திற்காக இளைஞர்களை பெரியளவில் பயன்படுத்திவருகிறார்கள் என்பதுதான்.

வேலைவாய்புகள், கிரிகெற் மட்டைகள், இதர சலுகைகள் எனப் பலவாறாக இளைஞர்களை மயக்கி தமது பிரசார வேலைகளுக்காக இளைஞர்களைப் பயன்படுத்திவருகின்றனர். வேட்பாளர்களுடைய 'திருவுருவப்படங்களை' தாங்கியபடியும் அவர்களது சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் சின்னம் வரைவதற்கும் என பசைவாளிகள், வெள்ளைப்பூச்சுகள் சகிதம் இளைஞர்கள் பெரியளவில் வீதிகளில் அலைவதை காணமுடிகிறது.

உண்மையில் இவர்களது நோக்கம் தான் என்ன? இந்த வேலைகளால் இவர்களுக்கு கிடைக்கப்போகும் இலாபம்தான் என்ன? தெளிவான சிந்தனை, குறிக்கோள் திட்டவட்டமான பலன் எதுவுமின்றி வெறுமனே ஆசனங்களுக்காக அலையும் வேட்பாளர்களுக்கு பின்னே எமது இளைஞர் சமூதாயம் அலைந்து திரிவது மிகவும் வெட்கக்கேடான விடயம். நாளை பாராளுமன்றத்துக்கு தெரிவாகப்போகும் வேட்பாளர்கள் கையை உயர்த்தி ஆதரிக்கப்போகும் அவரசகாலச் சட்டம் இந்த இளைஞர்களது உயிர்களையும் குடிக்கலாம் என்பதை இவர்கள் உணராதது ஏன்?

எதிர்கால தலைவர்கள் சமுதாயத்தின் தூண்கள் என்றெல்லாம் கருதப்படும் நம்பிக்கை நட்சத்திரங்களான இளைஞர் சமுதாயம் இவ்வாறு இலக்கின்றி அலைவது இன்னும் இன்னும் எமது சமுதாயத்தை புதைக்குழிக்குள்ளே தள்ளும் என்பதை இவர்கள் உணர வேண்டும். சரி தேர்தல் எப்படியோ நடந்து முடியட்டும் அதைவிடுவோம்.

எமது எதிர்கால சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் இளைஞர்கள் தீவிரமாக, சிந்தித்து சரியான பாதையில் செயலாற்ற வேண்டும் என்று சிந்திப்பார்களா ?

# ஓவியர் 'சௌ' பற்றி.......

## இது கேலிச்சித்திரக் காரர்களின் காலம்

ஈழத்தமிழர்களது இன்றைய அறிவுச் சூழலும் சரீ, கலைச் சூழலும் சரி ஆபத்தான நிலையிலேயே இருக்கின்றன. காத்திரமான விடயங்கள் ஆழக் கிணற்றில் போடப்பட்ட கற்களாகவும், மேம்போக்கான விடயங்கள் ஆர்ப்பரிப்பனவாகவுமே பெரும்பாலும் காணப்படுகின்றன.

ஆரோக்கியமான நிகழ் காலம் பற்றியோ அல்லது எதிர் காலம் பற்றியோ சிந்திப்பவர்கள் மேற்படி நிலைமைகளில் மாற்ற மேற்படுத்துவது பற்றிச் சிந்திப்பதும் செயற்படுவதும் அவசியமாகின்றது.

அர்பணிப்பும் ஆக்க பூர்வமான செயற்பாட்டு உந்துதலுமுடைய புதிய தலைமுறையினரை உருவாக்கும் சூழலை மேற்படி மாற்றங்களே கொண்டு

**சி. ஜெயசங்கர்**

வரும். அவ்வாறல்லாது புதிய தலை முறையினரில் குற்றம் காணுவது ஆற்றாமையன்றி வேறெதாகயிருக்க முடியும் ?

எனவே ஆக்கபூர்வமான எதிர்காலம் என்பது காத்திரமான விடயங்கள் பற்றியும் அவற்றில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டும் ஆழக்கிணற்றின் அடிக்கற்கள் போலாகி விட்டவர்கள் பற்றிப் பேசுவதுடனும் தொடர்புபடுகிறது.

இந்த வகையில் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு படைப்பாளி பற்றிப் பேசுவது எதிர்காலம் பற்றிய பிரக்ஞையின் வெளிப்பாடேயாகும்.

அவர் வேறு யாருமல்ல, 'சௌ' என்று ஈழத்து இலக்கிய உலகில் அறியப்பட்டிருந்த சாமுவல் கே.சவுந்தரராஜா ஆவார். 'சௌ'ன் ஆளுமைக்களை விளங்கிக் கொள்வதும் அந்த ஆளுமை எந்தளவிற்கு நினைக்கப்படுகிறது. அல்லது மறக்கப்பட்டிருக்கின்றது என்பதை மதிப்பிடுவதும் ஈழத்தமிழர்களது அறிவுச்சூழல், கலைச்சூழல் என்பவற்றின் நிலைமையை நாடி பிரித்தறியும் முயற்சியாகவே இருக்கின்றது.

ஓவியர் 'சௌ' வலிமையானதும் எளிமையானதுமான கோடுகளின் சொந்தக்காரர். கவிஞர் மாஹகவியின் குறும்பாக்களுக்கும் இலக்கிய நூல் தொகுப்புகளுக்கும், பாடநூல்களுக்கும் 'சௌ' வரைந்த கோட்டோவியங்கள் இதற்குச் சான்று பகரும்.

மேலும் ஓவியம் என்பது கோடுகளும், வர்ணங்களும் சார்ந்த



விடயம் மட்டுமல்ல இது அறிவு, கருத்து, பார்வை, கற்பனை, தரிசனம், சார்ந்த விடயம் என்பதை அவரது கோட்டோவியங்களும், கேலிச் சித்திரங்களும் மிகத் தெளிவாகப் புலப்படுத்து. தேடல், பரிசோதனை படைப்பு என்பவை பற்றிய புரிதலை 'சௌ' வின் மாதிரி உருவங்களில் இருந்தும் படைப்புக்களில் இருந்தும் விளங்கிக்கொள்ளமுடியும். இவை பற்றி விரிவாகப் பேசலாம்.

சுவரொட்டிகள் பற்றிய 'சௌ' வினது புரிதலும் அக்கறையும், கற்றலுக்குரியவை "உள்ளூர் நிகழ்ச்சிகளுக்காக சுவரொட்டிகள் தயாரிப்பது பத்திரிகைகளுக்கு வரைவதை விடவும் மகிழ்ச்சிகரமானது சமூகக் குழுமத்தில் நீங்களும் ஒரு அங்கம் என்பதை அவை உங்களுக்கு உணர வைக்கும்", என்ற 'சௌ' வினது கூற்று கலை வெளிப்பாடு மக்களுக்கு நெருக்கமானதாகவும் நேரடியான்தாகவும் இருப்பதன் ஆனந்தத்தைக் கொண்டாடுகின்றது.

'சௌ'பற்றி அறியப்படாத ஆனால் அதி முக்கியமான விடயமொன்றுள்ளது அது 1983, 1984 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நைஜீரியாவில் இருந்த பொழுது அவர் வரைந்த கேலிச்சித்திரங்களாகும்.

"சிரிப்பதற்குரிய ஒரு பொருள் உரத்துச் சிந்திப்பதற்குரிய பொருள்"

என்ற தலைப்பில் அவர் வரைந்த கேலிச் சித்திரங்கள் அக்கால கட்ட நைஜீரிய சமூக அரசியலைப் பேசுகிறது. குறிப்பாக நைஜீரிய . சமூக அரசியல் மீதான .அங்கதப் பார்வையாக அவை இருந்தாலும் காலனித்துவப்படுத்தப்பட்டு மேற்கத்தேய ஜனநாயக முறைமை திணிக்கப்பட்டு மூன்றாம் உலக நாடுகளாக ஆக்கப்பட்ட நாடுகளது சமூக அரசியலையும் பேசுவதாகவே இருக்கின்றது.

அது மட்டுமல்லாது, ஐரோப்பியர் உலகத்தை எவ்வாறு பார்த்தனரோ அவ்வாறே நாமும் பார்த்துப் பழக்கப்பட்ட அறிவுச் சூழலில் ஐரோப்பியர் அல்லாதவர்கள் அவர்களுக்கிடையில் எவ்வாறு கருத்துப் பரிமாற்றம் செய்திருக்கின்றார்கள். செய்ய வேண்டும் என்பது பற்றிய சிந்தனைக்கும் மேற்படி கேலிச் சித்திரங்களின் தொகுப்பு குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. இது




பற்றியும் விரிவாகப் பேச வேண்டும்.

பொதுவாகவே கேலிச் சித்திரகாரராக வெற்றி பெறுவது என்பது சாதாரண காரியமல்ல அப்பிடியிருக்க குறித்த ஒரு சமூகப் பண்பாட்டு அரசியல் சூழலில் பிறந்து வளர்ந்தது பிறிதொரு ச்மூகப்பண்பாட்டு அரசியல் சூழலில் வெளிவருகின்ற முன்னணித் தேசியப் பத்திரிகையில் வெற்றி பெற்ற கேலிச்சித்திரக்காரராவது மிகப் பெரும் சவால்

இவை பற்றி விளங்கிக் கொள்வதற்கும் கற்றுக் கொள்வதற்கும் 'சௌ' வினுடைய கையிலேயே தொகுப் பிற்கென தயார் செய்யப்பட்டு நீண்டகால்மாக அச்சேறாது கிடக்கின்ற

"A THING TO LAUGH IS A THING TO RONDER A COLLECTION OF CARTOONS SAMUEL K.SOU"

என்ற தொகுப்பு அச்சுருப் பெற்று வெளிவருவது அவசியமானதாகும் இத்தொகுப்பு வெளிவரவேண்டும்.



# போர்சதுரங்கத்தில்.........

2ம் பக்கத் தொடர்ச்சி

பெருஞ் சண்டைகளுக்குத் தேவையான வழங்கலையும், காயம்பட்டோர் வெளியெடுப்பையும் எதிரியைவிடத்துரிதமாக செய்ய முடியாது போய்விடும்; அப்படியானால் களமுனையில் புலிகளின் கை ஓங்குவதை தடுக்க முடியாது என்பதை உணர்ந்த சிறிலங்காப்படையினர் மீண்டும் கினிஹிர எனும் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டு அப்பாதையை இருவாரங்களுக்கு முன்னர் கைப்பற்றினர். ஆனால் அதன் சுற்றுப்புறங்களில் இருந்து புலிகளை முற்றாக அகற்ற முடியாமல் போனதால் புத்தூர்-சரசாலை வீதி இன்னும் தென்மராட்சிக்கான பிரதான வழங்கற்பாதையாக (Main Supply Route) இயங்க முடியாதுள்ளது. இந்நிலையில் புலிகள் தென்மராட்சியிலுள்ள படையினரின் பாதுகாப்புக் கட்டமைப்பின் முதல் தட்டிலுள்ள இரு உறுப்புக்களை கைப்பற்றி யுள்ளனர். ஒன்று எழுதுமட்டுவாள் தளத்தின் முற்காவல் வலையம், இரண்டாவது எழுதுமட்டுவாள் நாகர்கோவில் பாதை. இத்துடன் கண்டிவீதியில் எழுதுமட்டுவாள் சந்தியிலிருந்து கிளாலி செல்லும் உபவழங்கற்பாதையையும் புலிகள் துண்டித்துள்ளனர். (ஆனால் மிருசுவில் ஊடாக ஒரு மாற்றுவழியை சிறிலங்காப் படையினர் திறந்துள்ளனர்.)

இதனிடையில் புலிகள் எழுதுமட்டுவாள் - நாகர்கோயிற் பாதையை கைப்பற்றி அதை ஊடறுத்து கண்டற்காட்டுப் பகுதியூடாக வடமேற்காக வறணிப்பக்கம் நகர்ந்துள்ளனர். புலிகளின் இப்படை நகர்த்தல் தென்மராட்சிக்கான ஒரே ஒரு பிரதான வழங்கற்பாதையை நேரடியாக அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. கொடிகாமம்-நெல்லியடிப் பாதை துண்டாடப்பட்டால் தென்மராட்சி தப்புவது கடினம் என்பதை உணர்ந்து சிறிலங்காப்படையினர் வறணியையும் இவ்வீதியிலுள்ள ஏனைய படைநிலைகளையும் பலப்படுத்துகின்றனர். புத்தூர்-சரசாலைப் பாதையை திறக்கவும் அவர்கள் கடும் முயற்சி எடுக்கின்றனர். புலிகளின் அடுத்த படை நகர்த்தல் சிறிலங்காப் படையிரின் மேற்படி எதிர்பார்ப்பின் அடிப்படையில் அமையுமா? அல்லது எதிர்பாராத முனையில் கிளம்புமா? என்பதுதான் ஓயாத அலைகள் நான்கு இன்று எழுப்பியுள்ள கேள்வி. குடாநாட்டுப் போர்ச்சதுரங்கத்தின் காய் நகர்த்தலுக்கான வாய்ப்பும் வசதிகளும் புலிகள் பக்கம் அதிகரித்துச் செல்கின்றன என்பதும் அதைத் தடுக்க சிறிலங்காப்படைத்தலைமை அடுத்து என்ன செய்யப் போகிறது என்பதிலுந்தான் ஈழப்போரின் எதிர்காலப்போக்கு தங்கியுள்ளது.

# தமிழ் மக்களுக்கு......................

2ம் பக்கத் தொடர்ச்சி

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் பயங்கரவாதத்தினை பூண்டோடு ஒழிக்கப்போகின்றோம் என்று தனக்கேயுரிய அதிகப்பிரசங்கித்தனப் பாணியில் கூறினார். இவர் தேர்தல் மேடைகளிலும் பிரசாரக் கூட்டங்களிலும் யுத்தத்தினை யுத்தம் போல் நடத்துவதற்கு நாங்களே வல்லவர்கள் என்று முழங்கித் திரிவதும் நாடு அறிந்ததே. அங்கொரு கதையும் இங்கொரு கதையுமாய் கண்ணாமூச்சி விளையாடிய அரசாங்கம் ஒக்டோபர் 5ம் திகதி 2000ஆம் ஆண்டுடன் நோர்வே மத்தியஸ்தம் வகிக்கும் பேச்சுவார்த்தையும் கிடையாது என அடித்துச் சொல்லி விட்டது.

இங்கு, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம் எனக் கூறித் திரியும் தமிழ்க் கட்சிகளையும் சிங்களக் கட்சிகளில் குடியிருக்கும் தமிழ் அன்பர்களையும் நோக்கித்தான் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கின்றது. காலத்துக்குக் காலம் தேர்தல் சமயங்களில் நீதான் விடுதலைப் புலிகளுடன் பேசினாய், இல்லை நீதான் பேசினாய் என்று தமக்குள் ஆளையாள் அடித்துக் கொண்டிருக்கும் சிங்களக் கட்சிகளா எமது பிரச்சனைகளைத் தீர்க்கப் போகின்றார்கள்? சமாதனப் பேச்சுவார்த்தைகளை ஒரு மனித நேய அடிப்படையில் தன்னும் அணுகாமல் மீண்டும் மீண்டும் நம்பிக்கை மோசம் செய்யும் சிங்கள ஆளும் வர்க்கத்தினரா நீதியான சமூகத்தை கட்டியெழுப்புவதன் மூலம் சமாதானத்தைக் கொண்டுவர உதவுவர்? அல்லது விடுதலைப் புலிகளுடன் பேசினாலே எதிர்ப்பினைக் காட்டும் அந்த தாழ்ந்த அரசியல் முதிர்ச்சிப் படிநிலையில் இன்னும் தேங்கிக் கிடக்கும் சிங்களத் தொகுதியா சமாதானம் கொண்டுவர உதவப் போகின்றது? சந்திரிகா அம்மையார் ஒருவரே தீர்வு கொண்டு தரக்கூடியவர் என்று அவர் முந்தானையைப் பிடித்துக் கொண்டிருந்த (அல்லது இருக்கும்?) தமிழர் கூட்டணியோ அல்லது அவர் தயவால் அரசியல் பண்ணும் ஈழ மக்கள் ஜனநாக முன்னணியோ தமிழ் மக்களுக்குக் கூறட்டும். ரணில் நிச்சயம் தீர்ப்பார் என்று ஜோஸ்யம் சொல்லிக் கொண்டுதிரியும் அரசியல்வாதிகள் வெல்லட்டும். ஆயுதப் போராட்டமின்றி நாம் தமிழ் மக்களுக்குத் தீர்வினைக் கொண்டு தருவோம் என்கிறீர்களே, அந்தத் தீர்வின் மூலோபாயம் யாது? யாருடன் கூட்டுச் சேர்ந்து எங்கே எப்படிக் கொண்டு வரப் போகிறீர்கள் தீர்வினை? இக்கேள்விகளுக்குப் பதில் கூறுபவர்களுக்கே தமிழ் மக்கள் ஆதரவு தருவர்.

# மெல்ல நகரும் ஓயாத ------

2ம் பக்கத் தொடர்ச்சி

ஏழுதுமட்டுவான் நாகர் கோயில் பகுதியை இணைத்து நிற்கும் மிகப் பெரும் இராணு வேலியும் யாழ் நகருக்கான பிரதான வழங்கல் பாதையை புலிகளுக்கு தடைசெய்திருந்தது. இதே வேளை கிளாலியில் அமைந்திருந்த கடற்படைத்தளமும் இராணுவ முகாமும் அங்கிருந்த ஆட்லறி எறிகணை வீச்சுப் பலமும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பல பகுதிகளுக்கான பாதுகாப்புக்கு கேள்விக்குறியாகவே இருந்தது.

ஏனெனில் கிளாலிப் படைத்தளத்தில் 53வது பிரிகேட் ஆணையிறவில் இருந்து பின்வாங்கிய 54வது டிவிசன் துருப்பு உட்பட 513வது டிவிசன் கொமாண்டோப் படையினரும் கடற்படையினரிடம் விசேட பயிற்சி பெற்ற படகுப்படையினரும் (S.B.S)கடற்படைகொமாண்டோக்களும் நிலை கொண்டுள்ளனர்.

எனவே தான் ஓயாத அலைகள் 4 இச்சாதகமற்ற சூழ்நிலையை கவனத்தில் கொண்டு திட்டமிடப்பட்டது. பளை பிரதேசத்தில் ஆரம்பமாகிய ஓயாத அலைகள்4 எழுதுமட்டுவாள், கிளாலி, நாகர்கோயில் என மூன்று இராணுவ முகாம் மீதும் அதற்கிடையே தொடுக்கப்பட்டிருந்த இராணுவவேலியை சின்னாபின்னபடுத்துவதிலும் குறியாக இருந்தது.

புலிகள் ஏககாலத்தில் இம்மூன்று இராணுவ நிலைகளையும் தாக்குவதோடு தமது தாக்குதலை தற்போது பலாலி இராணுவத் தளம் மீதும் விஸ்தரித்துள்ளனர்.

எந்த இராணுவதளம் மீதான புலிகளின் தாக்குதலை அப்புறப்படுத்தலாம்என இராணுவம் திட்டமிட்டுபுலிகளை பின்நகர்த்தியதோ அதே பலாலி தளம் மீது தற்போது புலிகள் தமது கடும் ஏறிகணைத்தாக்குதலை மேற்கொண்டுவருகின்றனர். இது யாழ் குடாநாட்டு யுத்தகளத்தில் ஒரு புதியதிருப்பத்தினை ஏற்படுத்தலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாகவே புலிகள் தமது உறுப்பினர்களுக்கு அதிக சேதமில்லாத அதே வேளை படையினரை அதிகளவில் பலி கொள்கின்ற யுத்த தந்திரோபாய நடவடிக்கைகளையே திட்டமிட்டு வருகின்றனர். அதற்கேற்பவே தமதுதாக்குதல் வியூகத்தினையும், தாக்குதல் முறைகளையும் கைக்கொண்டு வருகின்றனர். அதன்தொடர்ச்சி ஆரம்பிக் கப்பட்டிருக்கும் ஓயாத அலைகள்4முன்னரைப் போலில்லா'ல் மிக மெதுவாக அதே வேளை மிக உக்கிரமாக தனது தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது.

இது வரை இருநூறுக்கு மேற்பட்ட படையினரை பலி கொண்டு ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை படுகாயப்படச் செய்து போர்முனையில் இருந்து அப்புறப்படுத்தியிருக்கும் புலிகளின் ஓயாத அலைகள் தாக்குதல் அணிகள் தமது தாக்குதல் முனைகளைபல களப்பிரதேசங்களில் திறந்து வருகின்றது.

பலாலி ஏழுதுமட்டுவில், நாகர் கோயில் பகுதி தாக்குதல் நடாத்தும் அதே வேளை கொடிகாமம் பகுதியில் நோக்கியும் தமது தாக்குதல் அணியைத் திருப்பி உள்ளனர். இது யாழ் நகர் பிரதேசத்தை நோக்கிய புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் மிகவும் திட்டமிட்டமுறையில் சாத்தியமான பிரதேசங்களை நாட இராணுவத்தை இல்லாதொழித்து முன்னேறும் நடவடிக்கையாகும்.

ஆணையிறவு இராணுவ தளத்தை கைப்பற்ற முன்னர் இயக்கச்சி,பளை தென்மராட்சியின் சில பகுதிகள் எனவும் நாகர் கோவில்பகுதிவரையான கரையோரப் பகுதிகளையே புலிகள் கைப்பற்றி இருந்தனர். அதேபோன்று யாழ்நகரின் மையப்பகுதியை கைப்பற்ற முன்னர் புலிகள் தென்மராட்சியின் முக்கிய பகுதிகளை கைப்பற்றுவதில் முனைப்பு காட்டுகின்றனர். இதனை யாழ் நகர் நோக்கிய புலிகளின் தாக்குதல் நகர்வு என கொள்ள முடியும். இன்னும் சில நாட்களில் இதற்கான விடை கிடைத்து விடும்.

# மட்டக்களப்பின் ............

தில் இக் கோட்டை நிர்வாகத் தலைமையகமான கச்சேரியாக மாற்றப்பட்டது.

இக் கச்சேரியில் பல ஆங்கிலேயர்கள் அரசாங்க அதிபர்களாகக் கடமை புரிந்துள்ளனர். இவர்களில் பலர் இப் பகுதி மக்களின் வாழ்க்கை முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் பற்றி மிகவும் மனக் கிளர்ச்சியுடன் தானும் விருப் பத்துடனும் எழுதியுள்ளனர் இவை சிறந்த வரலாற்று ஆவணமாகப் படிக்கப்படுவதுடன் பேணப்பட்டும் வருகின்றது.

இத்தகைய டயறிக் குறிப்புக்களும் நிர்வாக அறிக்கைகளும் ஆதார பூர்வமான தகவல்களைத் தருகின்றன. இவற்றுல் சில மட்டக்களப்பு பொது நூல் நிலையத்திலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

ஒரு போர்வீரனின் டயறிக் குறிப்பு

கலாடின் (COLOVR JERGEANT CALLADINE) என்பவர் 1793 - 1837 காலப் பகுதியில் 19 வது பிரிவு காலாட்படையில் பணியாற்றியவர். இவர் மட்டக்களப்புப் பற்றிய தன் மனப்பதிவுகளை தனது டயறியில் இப்படிக் குறித்து வைத்திருக்கிறார். மட்டக்களப்புக் கோட்டையிலிருந்து அவர் கண்டகாட்சிகள்.

"மட்டக்களப்பு நகர் கடலிலிருந்து ஒரு மைல் தூரத்தில் வாவிக்கரையோரமாக அமைந்த அழகிய நகரமாகும். படைகள் தங்குமிடம் ஒரு சிறிய கோட்டையினுள் உள்ளது. நகரத்தில் விஷேடமாகச் சொல்வதற்கு எதுவுமில்லை. ஆனால் தென்னந்தோட்டங்களில் குடிசைகள் பரந்து காணப்படுகின்றன. கடமை இலகுவானது மதுபானம் மலிவானது நல்லது. ஒரு படைவீரனுக்கு (SOLDIER) தேவையான எல்லாம் கிடைக்கின்றன. காப்டன் ஜோன்ஸ் மிகக் கண்டிப்பான பேர்வழியாக இருந்த போதும் ஒழுங்காக நடக்கும் ஒரு படைவீரனுக்குத் தேவையான சுதந்திரத்தை அவர் அனுமதித்தார்.

"......... டயறியின் இன்னொரு பக்கத்தில்" நாங்கள் இங்கு இருந்தபோது பல முதலைகளைப் பிடித்தோம். அவற்றுள் ஒன்று 24 அடி 6 இஞ்சி நீளமுடையது. முதல் நாள் வாவியில் குளித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணை விழுங்கியது. எனப் பலர் கூறியதனால் எங்களில் இருவர் கோடாலிகளைக் கொண்டு அம்முதலையை பிழந்தனர். ஆனால் அதன் வயிற்றில் மனித எலும்புகள் எதனையும் காணவில்லை........"

இன்னொரு பக்கத்தில் "......... ஒருநாள் பொறியில் பிடிக்கப்பட்ட ஒரு பெரிய புலியைக் கொண்டு வந்தார்கள். எலிப் பொறிபோல் மரத்தினாலான பெரியகூடு அது. அதற்குள் அந்தப் பெரிய புலி அகப்பட்டிருந்தது. புலியைக் கூட்டுடன் சுமந்து செல்வதற்கு 12 பேர் தேவைப்பட்டனர்."......

இவ்வாறு கூறப்பட்டிருப்பது. அன்றைய மட்டக்களப்பு ஒரு காட்டுக்குள் வசித்தது போன்ற உணர்வை ஏற்படுத் துகின்றதல்லவா?

கச்சேரிக்குள் கல்வெட்டு :-

(5ம் பக்கத் தொடர்ச்சி)


கச்சேரியில் முன்பு அரசாங்க அதிபர் அலுவலகம் இருந்த அறையின் முன்பாக ஒரு கருங்கற் பொழிவுக் கல்வெட்டு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. டச்சு மொழியில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டின் ஆங்கில வடிவம் அப்படியே தரப்படுகின்றது.

This cherch is funded on the 18th Feb 1740.A.D of which the first stone is laid by Mrs.MAMDE MOOR wife of the chief at Batticaloa Mr.R. D.Raymond Buyk.

இவ்வாறு வரலாற்றுத் தொடர்புடைய ஒரு கட்டிடத்தில் நடமாடுகின்றோம் என்ற எண்ணம் எம்மை பெருமை கொள்ள வைக்கிறதல்லவா?

இந்தக் கட்டிடத்தில் எத்தனை தளபதிகளும், கப்படன்களும் நடமாடியிருப்பார்கள் எத்தனை கூச்சல்களும், கும்மாளங்களும் இடம்பெற்றிருக்கும் எத்தனை சீமான்களும், சீமாட்டிகளும் கைகோர்த்து நடனமாடியிருப்பார்கள். எத்தனை பிரச்சினைகளும், சிக்கல்களும் விவாதிக்கப்பட்டிருக்கும். முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் நூறு வருடங்களுக்கு முன்னர் இருந்த இடத்தில் நாம் நடமாடித் திரிகின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது அதுவொரு அபூர்வமான உணர்வாக இருக்கும். என்பதை என்னால் மட்டுமல்ல உங்களாலும் மறுக்க முடியாதல்லவா?

**குறிப்பு :- இத்தொடரை எழுதுவதற்கு உதவிய மட்டக் களப்பு கலாசார உத்தியோகஸ்தர். க. தங்கேஸ்வரிக்கு எனது நன்றிகள்.**





**சமாதானத்தின் பெயரால்**
**உரிமை சாகடிக்கப்படக்கூடாது.**
**உரிமையின் பெயரால்**
**சமாதானம் வாழவைக்கப்பட வேண்டும்.**

**பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி**

# இறந்த கணவரின் சடலத்தை வயலுக்குள் சென்று பார்த்தேன்

(ஒட்டமாவடி நிருபர் றூமி)

கடந்த இரு தினங்களுக்கு முன் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள வந்தாறுமூலைக்கு மேற்கே சின்னாளம் வெளி எனும் கிராமத்தில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் மரண விசாரனையில் அது ஆட்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மாவடி வேம்பைச் சேர்ந்த நல்லசேகரம் நல்லராசா (வயது29)எனும் குடும்பஸ்தரின் மரண விசாரனையின் போதே வந்தாறுமூலை மரண விசாரணை அதிகாரி வீரக்குட்டி மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

இம்மரண வீசாரனையில் சாட்சியளித்த இறந்தவரின் மனைவி முருகுப்பிள்ளை புஷ்பலகா கூறுகையில் தனது கணவன் வழமைபோல் சம்பவதின்த்தன்று வயல் வேலைக்கு சென்றதாகவும் அன்று காலை 11.30 மணியளவில் இச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றதாகவும் பிற்பகல் 3.00மணிக்குத்தான் தகவல் கிடைத்தது கணவனின் சடலத்தை வயலுக்குச் சென்று பார்த்தேன் என்று கூறினார்.

சாட்சியங்களை ஏறாவூர் பொலிஸ்.பிரிவு,குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவின் சார்ஜன் பீ.ஜெகநாதன் நெறிப்படுத்தினார்.

## சமய தீட்சை

(வெற்றி)

சித்தாண்டி சைவ இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று செங்கலடி சிவ தொண்டன் நிலையத்தில் சமய தீட்சை நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு நடைபெறும் மேற்படி தீட்சையை சிவ தொண்டன் நிலையத்தின் நிலைய சுவாமி செல்லத்துரை அவர்கள் வழங்குவார்.

# குண்டு வீச்சுக்கு பொலிஸ் நிலையம் பாதிக்கவில்லை!

(ஏறாவூர்நிருபர் அஹமட் ஹபீர்)

வாழைச்சேனை பொலிஸ் நிலையம் மீது நேற்று வெள்ளிக் கிழமை" காலை 7.30 மணியளவில் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் பத்து மோட்டார் குண்டுகள் பொலிஸ் நிலைய வளாகத்தினுள் விழுந்து வெடித்த போதும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென தெரிய வருகிறது.

புலிகளின் தாக்குதலை அடுத்து பொலிஸார் பதில் தாக்குதல் மேற் கொண்டனர். இதனை அடுத்து புலிகள் பின் வாங்கி சென்றதாக தெரிவிக்கப் படுகிறது.

கறுவாக்கேணி காட்டுப் பகுதியில் இருந்து புலிகள் தாக்குதல் நடத்தியதாக தெரியவருகிறது.

## முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நிவாரணத்தில் வெட்டு

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத் திற்கான இடம்பெயர்ந்தோர்க்கான நிவாரணத்தை பன்னிரெண்டு மில்லியன் ரூபாவாக அரசு குறைத் துள்ளது. முல்லை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களிற்கு நிவாரணம் வழங்க 30 மில்லியன் ரூபா தேவையாகும். பன்னிரெண்டாயிரம் பேரிற்கு மட்டும் நிவாரணம் வழங்க அனுமதித்துள்ள அரசு. அதற்கு 12 மில்லியன் ரூபாவை மட்டும் வழங்குகின்றது. இதற்கு முன் 14 மில்லியன் ரூபாவாகவும், அதற்கு முன் 17 மில்லியன் ரூபாவாகவும், ஆரம்பத்தில் 24 மில்லியன் ரூபாவாகவும் இருந்த நிவாரணப்பணம் குறைக்கப் பட்டதால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இன்று கருத்தரங்கு

(சி.நாகேந்திரன்)

கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு தமிழ் மக்களின் இன்றைய அரசியல் நெருக்கடி சம்பந்தமான கருத்தரங்கு இன்று மட்/சாள்ஸ் மண்டபத்தில் மு.ப. 10.00 மணிக்கு எஸ்.ஜெயானந்தமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

## வாணிவிழா

(நமது நிருபர்)

கிரான்குளம் பொதுநூலக வாணிவிழா நேற்று வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

நூலக வாசகர் வட்டதின் தலைவர் பூபாலப்பிள்ளை சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பொது சிறுவர் விளையாட்டு அரங்கு திறந்து வைக்கப் பட்டதுடன் நூலகத்திற்கான தொலைக்காட்சிப் பெட்டியும் கையளிக்கப்பட்டது.

## ஆளும் கட்சி......................

புறக்கணிக்கப்பட்டவர்கள்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டன. என்றும் த.வி.கூட்டணி செயலாளர் நாயகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க அம்பாறை மாவட்டத்தில் தமிழர் மகாசபையின் சுயேட்சைக் குழு மட்டுமே தமிழர் சார்பில் போட்டியிடுகிறது. இதில் ஈ.பி.டி.பி, ரெலோ, மற்றும் சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் போட்டியிடுகிறார்கள்.

## நாகர் கோவில்.......

நடத்தப்பட்ட தாக்குதல் களினால் படைத்தரப்பு பாரிய இழப்புக்களை சந்தித்து வருவதாகவும் இந்த நிலையில் வியாழன் ஆரம்பிக்கப்பட்ட நாகர்கோவில் மீதான தாக்குதல் முன்னேற்றகரமாகத் தொடர்வதாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்துள்ளது.



இதேவேளை நாகர்கோவில் படைத்தளங்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் புலிகளுக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுவருவதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

## திருமலையில்..............................


மூதூர் மத்திய கல்லூரியில் இருந்த ஒன்பது கணினி இயந்திரங்கள் களவாடப் பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டோர் ஐ.சி.ஆர்.சி அலுவலகத்திற்கு சென்று அங்கு நிறுத்தப்பட்டிருந்த 8 மில்லியன் ரூபா பெறுமதியான நான்கு வாகனங்களை அடித்து நொருக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து மருத்துவப் பணிகள் குடிநீர் விநியோகத் திட்டம் ஆகியவை இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி தெரிவித்தார்.




ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் மட்டக்களப்பு மாவட்டம்
இருள் சூழ்ந்த இளைஞர், யுவதிகள், பெற்றோர்கள் வாழ்வில்
விடியலை ஏற்படுத்தப்போகும் இளைய தலைமுறையின் இளவல்.
மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்
சி.மாமாங்கராஜா அவர்களுக்கு
வாக்களிப்போம்.





பொதுஜன ஐக்கிய முன்னணி
மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண அபிவிருத்திக்கு
பொதுஜன ஐக்கிய முன்னணியின்
முதன்மை வேட்பாளர்
கே. எஸ் கணேசமூர்த்தி அவர்களுக்கு
வாக்களிப்போம் !



## தேர்தல் கண்காணிப்பு

தேர்தல் தொடர்பான முறையீடுகளை தேர்தல் கண்காணிப்புக்குழுவிடம் பின்வரும் இடங்களில் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தெரிவிக்கலாம்

- YMCA மட்டக்களப்பு 22495/25568
- YMCA கல்லாறு 067-29084
- தடாகம் கோரகல்லிமடு 57586
- சர்வோதயம் மட்டக்களப்பு 25292
- சர்வோதயம் களுவாஞ்சிக்குடி (மின்சார சபை எதிரே)
- சர்வோதயம் வாழைச்சேனை (புகையிரத நிலையம் அருகே)

மட்டக்களப்பு மாவட்ட
தேர்தல் கண்காணிப்பு குழு



வீணை

ஈ.பி.டி.பி
ஒடுக்கு முறையோடு ஒத்துபோகும்
சமாதானமும் அடிமைத்தனங்களை
அனுசரிக்கும் அமைதியும் எமக்குத்
தேவையல்ல நாம் விரும்புவது
எம்மக்கள் உரிமையோடு வாழக்கூடிய
சூழலையும் அதற்கான சுதந்திரத்தையும்
வீணைக்கே வாக்களிப்போம்!


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.